
www.tamilrangam.net

Raya

**1989** ஆவணி-புரட்டாதி



# தேடல்

P'RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
-SEINE ; FRANCE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

வாசகர்களுக்கு,

எமது சஞ்சிகைக்கான தொடர்பு முகவரியை இவ்விதழிலிருந்து மாற்றம் செய்துள்ளோம் என்பதையும் இதனையே நிரந்தர முகவரியாகக் கொள்ளுமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். இது வரையிருந்த எமது முகவரி தற்காலிகமானது எனக் குறிப்பிடப்பட்டு வந்துள்ளமையை நீங்கள் அறிவீர்கள். ஏற்கனவே முகவரி மாற்றப்பட்டதாலும், மேலும் பல காரணங்களாலும் எமக்கு இதுவரையில் கடிதத் தொடர்புகள் சிக்கலானதாக இருந்ததோடு பலரது ஆக்கங்கள், விமர்சனங்கள் என்பவை கிடைக்க முடியாமலும் போய்விட்டன. இதற்காக நாம் மன்னிப்புக் கோருவதோடு, தங்களது ஆக்கங்கள் அனுப்பப்பட்டும் எமது சஞ்சிகையில் இடம்பெறவில்லையெனக் கண்டவர்கள் தயவுசெய்து மீளவும் எமக்குஅவைகளை அனுப்பிவைக்கும்படியும், புதிதாக அனுப்பவினைபவர்கள் இப்புதிய முகவரிக்கூடாகவே தங்களது அனைத்துத் தொடர்புகளையும் மேற்கொள்ளும் வண்ணமும் வேண்டப்படுகிறீர்கள்.

"THEDAL"

O.P.A.L

B.P NO:166

92805 PUTEAUX CEDEX

FRANCE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

# 'இனியொரு விதி செய்வோம்!'

## மகாகவி

## சுப்பிரமணிய பாரதியாரை

### நினைவு கூர்ந்து.........

- இரத்தினம்



பாரதியின் இலக்கிய ஆளுமை, அவனது மேதைத்தனம், நவீன சிந்தனையின் தீவிரம், புதுமை, புரட்சி பற்றியெல்லாம் எத்தனையோ எண்ணற்ற ஆய்வுகள் தமிழ் இலக்கியப்பரப்பினை அலங்கரிக்கின்றன அவற்றின் மத்தியில் பாரதியை நினைவு கூரும் இச்சிறு... சிறிய கட்டுரை..

புரட்டாதி 11ம் திகதி பாரதியாரின் நினைவு தினம். தமிழ் இலக்கியப் பரப்பில் படிந்து போயிருந்த பழமை, பிற்போக்குத்தனம், மூடநம்பிக்கைகள் என்பவற்றைத் தனது புதுமைக் கருத்துக்கள் மூலம் தட்டித்துடைத்து தூய்மைப்படுத்தியவன் பாரதி. சாதரண மக்களுக்கு அன்னியமாகிப் போயிருந்த வித்துவத்தனம் வாய்ந்த கவிதையை காலத்தின் தேவைக்கேற்ப பேச்சுவழக்கிலமைந்த மொழி நடையைக்கையாண்டு எளிமைப்படுத்தியதன் மூலம் பாமரர்களது உதடுகளிலும் அவற்றை உச்சரிக்க வைத்தவன்.

"எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம் பொதுஜனங்கள் விரும்பும் மெட்டு, இவற்றினையுடைய காவியம் ஒன்று தற்காலத்திலே செய்துதருவோன் நமது தாய்மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகிறான்" என்றுரைத்த பாரதியின் படைப்புக்கள் அத்தனையிலும் இவ்வம்சம் முழுமையாகப் பிரதிபலிப்பதைக்காணலாம். இருள் சூழ்ந்து கிடந்த இந்திய நாட்டின் தென்கோடியிலே - உதித்த பாரதி தனது எழுச்சிக் கவிதைகளின் மூலம் தேசத்தின் மூலை முடுக்குகளெல்லாம் விடுதலை வெளிச்சம் பாய்ச்சியவன். பாரதியின் நூற்றாண்டையொட்டி பல விதமான ஆய்வுகள் பாரதியை புதிய புதிய கோணத்திற் படம்பிடித்துக் காட்டியதும்,

www.tamilrangam.net

அவரது இலக்கிய வளம் நவீன கவிதை இலக்கியம் பற்றிய ஆய்வுகளுக்கெல்லாம்களம் அமைத்துக் கொடுத்தவண்ணம் இருப்பதும், காலத்தைக் கடந்து நிற்கும் பாரதியின் படைப்புக்களுக்குத்தக்க சான்று பகர்கின்றன. கவிதை இலக்கியம் பாரதியிடமிருந்து தான் தமிழுக்கு புதிய வடிவமெடுத்தது. மன்னர்களையும், மணி மகுடங்களையும், பூக்களையும், அழகிய பூவையரையும், தென்றல் தவழ்ந்த மாளிகைகளையும், அதில் உல்லாசம் கொண்ட உயர்குடி காதலர்களையும் மாத்திரமே பாடிப் பாடி வலுவிழந்து களைத்துச் சோர்ந்து போயிருந்த கவிதையை அதிலிருந்து மீட்டு, மாளிகைகளிடமிருந்து மண்குடிசைக்கு, மன்னர்களிடமிருந்து சாதாரண மக்களுக்கு என யதார்த்தத்தின் பால் திசைதிருப்பி

"சுவை புதிது, பொருள் புதிது, வளம் புதிது,
சொற்புதிது, சோதிமிக்க நவகவிதை"

என்று தனது குறிக்கோளோடு புதுமையும், பொலிவும், புரட்சிக் கருத்துக்களும் கொண்டு தமிழ்க் கவிதையை கம்பீரமாக நிமிர்ந்து நிற்கச் செய்தவன் பாரதி.

சமூக, அரசியல், பொருளாதார, பண்பாட்டுத் துறைகளில் மாற்றத்தையும், புதுமையையும் அவாவி நின்ற பாரதியின் காலத்துக்கேற்ற நவீன சிந்தனையின் தீவிரப் போக்கினை அவனது பெரும்பாலான கவிதைகள் எடுத்துக் காட்டுகின்றன. காலத்தைவென்று நிற்கும் பாரதியின் கவிதைகளுடன்தான் தமிழ் இலக்கியம் பழமைத்தளைகளுக்குள் இருந்து விடுபட்டு புதுயுகத்துள் பிரவேசிக்கின்றது என்பது மறக்கப்பட முடியாத உண்மை.

இந்திய சமுதாயத்தின் சாபக்கேடாகிப்போன ஏழ்மை, அடிமைத்தனம், சாதி அமைப்பு முறை, பெண்ணடிமைத்தனம், சுரண்டல் என்பவற்றைச்சாடி பாரதிபாடிவைத்தவை பாரதியின் தீவிர தன்மையினையும், அவனது முற்போக்கு அம்சத்தினையும் காலங்கள் தோறும் உரைத்துக் கொண்டேயிருக்கும். பாரதியின் ஏனைய பிற அம்சங்கள் அவர் காலச் சூழலுக்கேற்பவே வைத்துப் பார்க்கப்பட வேண்டியவை.

பாரதி வேண்டி நின்ற சமுதாய மாற்றம் இன்றளவும் ஏற்படவில்லை.. அதனால்தான் அவனது தர்மாவேசக் குரல் காலத்தைக்கடந்து நின்று அவற்றை இடித்துரைத்தவண்ணமிருக்கிறது. சமூகப் பிரக்ஞையிழந்து, யதார்த்தத்திலிருந்து விலகிவெறும் விற்பனைப் பண்டமாகி மலிந்து போயிருக்கின்ற தமிழ்க் கலை, இலக்கியங்களை பாரதி தோன்றி நூற்றி எழு வருடங்களின் பின்னும் இன்று நோக்கும்போது பாரதியின்

"நெஞ்சு பொறுக்குதில்லையே — இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்....."



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

என்ற வரிகள் தான் நினைவுக்கு வருகின்றன. பாரதியின் நினைவுகளும் இந்த ருணத்திலாவது அவனது 'இனியொரு விதிசெய்வோம்...' எனும் தர்மாவேசக் குரலினைச் சற்றுச் செவிமடுப்போமா?.

---

# சுதந்திரம்?

தினம் தினம் ஒவ்வொரு
கால்களின் கீழும்
எங்கள் சுதந்திரம்

சற்றே முதுகை நிமிர்த்தி
மூச்சுவிட்டு நிதானமாக
மீண்டும் மீண்டும்...
ஒவ்வொரு நாளும்
ஒவ்வொரு கனவும்
கால்கள் வேறு கால்கள் வேறு
நாங்கள் ஒன்றே
நாங்கள் ஒன்றாகி....
வாருங்கள் எல்லோரும்,

எங்கள்
கைகளை வெட்டியும்
நாக்கினைத் துண்டித்தும்

பேசவும்
எழுதவும்
உரிமைகள் தந்த
சுதந்திரமுண்டு சுதந்திரமுண்டு

எஞ்சிய இரண்டு
கண்களையும் இனி
எதற்கோ என்றே
பிடுங்கி எறியுங்கள்

இறப்பினில்தானே
உரிமைகள் கிடைக்கும்
இறப்போம் இறப்போம்
இன்பமாய் இறப்போம்

இழந்த சுதந்திரம்
அடைந்துவிட்டோமென்று......

→ அருந்ததி



www.tamilrangam.net

**எமது தேடலில்...**

# எமது அடுத்த சந்ததியின் எதிர்காலம் எப்படி இருக்கும்?

படுகொலைகள், வன்முறைகள், பயங்கரவாதம், என்பவற்றின் மத்தியிலேயிருந்து ஈழத்திலிருந்து வந்துகொண்டிருக்கும் கடிதங்கள், செய்திகள் தரும் தகவல்கள் எமது எதிர்கால நம்பிக்கையின் மீதே கேள்விகளை எழுப்பிக்கொண்டிருக்கிறது.

ஆரம்பத்தில் எமது இளஞ்சந்ததியினர் ஆண்கள், பெண்களாக விரும்பியே தம்மை விடுதலை இயக்கங்களுடன் இணைத்த அவர்களது வேட்கையை தமது பதவி, அதிகார வெள்ளித்தீயில் போட்டுப் பொசுக்கிய தலைமைச் சக்திகள் வெறுப்பையும், விரக்தியையும் மட்டுமே அவர்களிடத்தில் விட்டுவைத்தன.

தமக்கேயுரிய முறையில் ஒருவரையொருவர் அடித்துக்கொண்டு மூலைக்கொருவராகச் சிதறி எதிரிக்குப் பாதை அமைத்துக்கொடுத்ததோடு ஒப்பந்தங்களும்சமரசத் தீர்வுகளுமென்றாகிப் பின்தள்ளிப் போன எமது போராட்டம் பல படிப்பினைகளை எமக்குப் பெற்றுத்தந்தன. போராட்டமென்பது வெறுமனே ஆயுதங்களினால் மட்டும் நடத்திவிடக்கூடியதொன்றல்லவென்றும் போராட்டமென்பதுஒரு சில தனி நபர்களாலோ, அல்லது சில குழுக்களாலோ நடத்தப்படுவதல்ல என்பதும், அது கருத்தியல் ரீதியாக வளர்க்கப்பட்ட மக்களினால், ஒடுக்கப்பட்ட தொழிலாள, பாட்டாளிகர சக்திகளினால் முன்னெடுத்துச் செல்லப்படவேண்டியதென்பதுமான வரலாற்றின் பாடத்தை மீளவும் எமக்கு அனுபவத்தின்மூலமாகக் கற்றுத்தந்துள்ளது.

இதற்குரிய வேலைத்திட்டம்தான் இனியொரு சரியான போராட்டத்திற்கான முன்நிபந்தனையாக இருக்க முடியும். ஆனால் இன்றைய ஈழத்து நிலைமைகளோ அதனை எந்தளவுக்குச் சாத்தியமாக்கும் என்பதனைக் கேள்விக்குறியாக்கியுள்ளது. வடக்கிலமைந்த மாகாண ஆட்சியினரின் இன்றைய நடவடிக்கைகள் எமது எதிர்கால போராட்ட நடவடிக்கைகளை நசுக்கும் தன்மையில் ஒரு புதுப்பரிமானத்தை எட்டியுள்ளது. தொழிலாள, பாட்டாளிகர மக்கள் தலைமையில் புரட்சியின் பின் நிறுவப்படும் ஓர் அரசு தவிர்ந்த வேறு எந்த ஓர் அரசுமே தனக்கெதிரானதென்னும் வகையில் புரட்சிகளுக்கான அனைத்து வாசல்களையுமே அடைத்துவிடுவதற்குத்தான் தனது முழுப்பலத்தையும் பிரயோகிக்கும் என்னும் தன்மைக்கு இன்றைய வடகிழக்கு மாகாண அரசும் விதிவிலக்கல்லஎன்பதும் இன்று வெளிப்படையாகியுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

தேர்தலில் தோற்றால் பதவி விலகிவிடுவோம் என்றும், தமது வழி ஜனநாயகவழி தானென்றும் கூறிக்கொண்ட இவர்கள் தமது ஆட்சியை நிரந்தரமாக நிலைநிறுத்திக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதன் மூலம் தமது உண்மையான நிலையைத் தெளிவுபடுத்தியுள்ளனர். தமது ஆட்சியை நிரந்தரமாக்கிக் கொள்வதற்கு தேவையான பலத்திற்காக பன்னிரண்டு வயதுக்கு மேற்பட்ட இளஞ்சிறுர்கள் இவர்களால் இன்று பலவந்தமாகக் கடத்திச் செல்லப்பட்டு இராணுவப் பயிற்சிக்குட்படுத்தப்படுகிறுர்கள். இது எந்தளவிற்கு பாரதூரமான பின்விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். இன்றைய இதனது உடனடி எதிர்விளைவாக அநேக இளஞ்சிறுர்கள் நாட்டைவிட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறுர்கள். கொழும்பில் இவர்களுக்கென்றே ஓர் முகாம் திறக்கப்பட்டுள்ளது. இளவயது ஆண்பிள்ளைகளையுடைய வசதியற்ற பெற்றோர் தம் பிள்ளைகளை வீட்டிற்குள்ளேயே வைத்துக்கொண்டு 'கிலி' பிடித்துப்போயிருக்கிறுர்கள் பாடசாலைகளெல்லாம் வெறிச்சோடிப்போயிருக்கின்றன. இந் நிலை தொடரும் பட்சத்தில் நாடு மேலும் மேலும் சூன்யமானதொரு நிலைக்கு தள்ளப்பட்டுவிடுவதை யாராலும் தடுக்க முடியாமல் போய்விடும்.

போராட்டம் பற்றிய எமது எதிர்கால நம்பிக்கையும் தவிடுபொடியாகி விடும். மக்கள் உளரீதியான அதிர்ச்சிக்குள்ளாகி அதிலிருந்து மீள்வதற்கே பல ஆண்டுகள் பிடிக்கும். எதிர்காலத்தில் ஓர் கல்வியறிவற்ற சூன்யமான போராட்டமென்று லேகுலை நடுங்கக்கூடிய மக்கட் தொகையைக் கொண்டதாக நாடு இருப்பதற்குத்தான் இன்றைய நடவடிக்கைகள் வழிகோலுகின்றன. மேலும் ஒரு தேசத்தின் செல்வங்களான இளஞ்சந்ததியினரின் அகதிகளவான வெளியேற்றமென்பது எவ்வளவு பெரிய இழப்பு. இவர்கள் அந்நிய நாடுகளில் முகமிழந்து, முற்றாக வேர் விடுவதற்குத்தான் ஈழத்தின் இன்றைய நிலை வழிவகுத்துக்கொடுத்துள்ளது.

முற்று முழுதாக போராட்டம் திசைதிருப்பி தடம்புரண்டு எதிரியாரென்பதை மறந்து போன நிலையில் ஒரு பக்கம் 'பாசிச'வாதிகளுக்கு முகம்கொடுக்கும் மக்கள், இன்னொருபுறம், பிள்ளைகளைப் பலிக்கடாவாக்கப் பார்த்திருக்கவேண்டிய வாய் பேசமுடியாத நிலை. தொடர்ந்தும் எம்மக்கள் இரண்டுபக்கமும்அடி வாங்கும் மத்தளங்களாகவே உள்ளனர். எனவே காலந்தாழ்த்தி இதன் எதிர் விளைவுகளுக்குள் அமிழ்ந்து போகாமல் இந்நடவடிக்கைகளிலிருந்து மக்களை மீட்பதற்குரிய அனைத்து நடவடிக்கைகளுக்கான பொறுப்புக்களும், தம்தலையில்- சுமத்தப்பட்டுள்ளனவென்பதை ஒடுக்கப்படும் வர்க்க, முற்போக்குச் சக்திகள் புரிந்து கொண்டு உடன் செயல்படவேண்டும்.

www.tamilrangam.net



# வாக்கும் வக்கும்.

"சிதைவு"

— ஈழத்துச்செல்வன்

"மச்சான், என்ன உப்பிடிக் களைச்சு விழுந்து ஓடி வாறும்?"

"வீடியோச் குடை பூட்டப்போருங்கள்படங் எடுத்த கெசட்டுகளைக் குடுத்துப் போட்டு, வேற படங்கள் எடுக்கப்போறன்"

"வீடியோக் கடைக்கெண்டா, நானும்வாறன் மச்சான்",

"சரி, கெதியா வா. எட்டரைக்கு எக்கணம் பூட்டப் போருன்"

"இலங்கைப் பிரச்சனை என்னவாம்,. எதும் கேள்விப் பட்டியே?"

"அதைப்பற்றிக் கதைச்சால் விசர் வரும் வேற கதை இருந்தாப் பறை மச்சான்".

"எத்தனை கெசட் எடுத்தனி"?

"மூண்டு"

"இண்டைக்குக் குடுக்காட்டால் என்ன?"

"ஏன், நீ பாக்கப் போறியே?"

"ஓம், சும்மா ஒருக்காப் பாப்பம்"

"மூண்டையும் என்னெண்டு ஒரு நாளிலபாக்கப்போறும்?"

"நீயும் நேத்து எடுத்து ஒருமிக்கப் பாத்துப்போட்டுத்தானே இண்டைக்குத் திருப்பிக் குடுக்கப் போறும்?"

"நான் எடுக்கலே மச்சான். இது என்ர பக்கத்து 'றூம்மேட்' முந்தநாள் எடுத்துப் பாத்திட்டு நேத்துத் தந்தது. நானும் மணியும் ராத்திரியே பாத்திட்டம். இண்டைக்குக்குடுக்கப்போறன். ஒருநாள் பிந்திக்குடுத்தால் ஒவ்வொண்டுக்கும் அஞ்சு 'பிறாங்' கூடக் குடுக்கவேணும். நீவேணுமெண்டா எடுத்துக்கொண்டு போயிட்டு நாளைக்குஅஞ்சு பிறாங் கூடப்போட்டுக்கெசட்டுகளைத் திருப்பிக்குடு!"

"அப்ப உதில நில், நான் போய் வேற படக்கெசட் ரண்டு எடுத்தாறன்"

"சிவாஜியோ எம்.ஜி.யாரோ திறம்நடி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

கன்?"

"எம்ஜியார்தான்"

"என்ன நீ சொல்ற எம்ஜிஆர் சிவாஜி யின்ர ஒரு வசனத்துக் காணுமே ?"

"உனக்கு விசர். எம்.ஜி.யாற்ற ஒரு கம்பு வீச்சுக்குச் சிவாஜிகிட்ட வருவானே?

"அப்படிப் பாக்கிறெண்டா, சத்தியரா ஜைப் போல சண்டைக் காட்சியள்லதுவள் பறக்க அடிக்க ஆரால முடியும்?"

"ஏன், கமலதாஸன் என்ன குறைஞ்ச- வனே?"

"கமலதாஸன் காதல் காட்சியளில - தான் திறமா நடிப்பான்."

"அதுக்கும் நல்ல சோடி கிடைச்சாத் தான் அப்புடி நடிப்பான்?"

"ஏன், சிறீதேவியும் கமலதாசனும்சோ க்காத்தானே நடிச்சது?"

"ஏன், ஜெயலலிதா எம்ஜியாரோட - காதல் காட்சியள்ல என்ன சோக்காநடி ச்சவள் தெரியுமே?"


"சிவாஜியோடயும் அப்புடி நடிச்சவள் தானே?"

"சரி மச்சான், இதைப் பேந்து பறை வம் இப்ப நேரஞ்செண்டு போச்சு படக் கடை பூட்டப்போறன்.

●

"என்ன மச்சான், போனேடன எடுத் துக் கொண்டு வாரும்?"

"அக்காவின்ர புருசன், கடையில அந் தக் கெசட்டைத் திருப்பிக் குடுத்துப்போ ட்டு வேற புதுக்கெசட் அஞ்சு எடுக்கநிண் டார். காசுகுடுக்கப்போன கெசட்டை- நான் அப்படியே வேண்டிக் கொண்டந்திட்



டன் வேணுமெண்டா நீ இதிலரண்டைக் - கொண்டு போ. இப்படி ஆளையாள்மாறி எடுத்தமெண்டா, காசும் குறையும், பட மும் பாக்கிறதாப் போச்சு"

"அவர் ஒண்டடியா ஏன் அஞ்சு கெசட் எடுக்கிறார்?"

"காம் அவுட்டப்பரிசில இருக்கிறவர், ஆருக்காள் மாறி ஒரு நாளைக்குள்ளபாத் துமுடிச்சிடுவினம்"

"உன்ன மச்சான் அநியாயம் சொல் லப்படாது எங்கட சனங்கள் இலங்கையில இருக்கேக்கயும் கலை உள்ளங் கொண்ட வைதான், இஞ்ச அகதியளா வந்தும்கலை உள்ளத்தோடதான் இருக்குதுகள்"

"தமிழன் எங்கு கோசு போனவன்?

"பின்ன என்ன, அதை ஒருக்காச்சொ ல்லவேணுமே?"

"அதுசரி மச்சான், தாருந்தக் கலை சங்கம் பிரான்சில வைச்சு நடத்திறது?"

"எட கோதாரி, உனக்கு இன்னும்தெரி யாதே? அவங்கள் கலைச்சேவைக் கெண் டே பிறந்தவங்கள். எங்க போனலும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

அவங்கட கெட்டித்தனத்தைப் பற்றித்தானே சனங்கள் பேசுது. பரிசில தமிழாக்களின்ர புகழ் கொடிகட்டிப் பறக்கிறதும் அவங்க-ளாலதான்"

"உண்ணையடா மச்சான் நீ சொல்றது உண்மைதான். அந்தக் காலத்திலயும் எங்கட ஆக்கள் இந்தியாவிலயிருந்து பெரிய மேளம், சின்னமேளச் செற்றுகளைக் -கொண்டு வந்து கோயில்களில சதிர்க்கச்-சேரி நடத்தி யாழ்ப்பாணத்தில கலைச்சேவை செய்தவே. பிரான்சில அகதியளாவந்திருந்தும், அது போல இந்தியாவிலயிருந்து சினிமா நடிக நடிகையளையும் பாட்டுக்காறரையும் கொண்டுவந்து, சோக்கான இன்னிசை இரவும் பாட்டுக்குப் பாட்டுப்போட்டியும் நடத்தி, தங்கப்பதக்கமும் குடுக்கி-னம்"

"தமிழ்த் தொண்டு, கலைத்தொண்டு, கடவுள்த்தொண்டு, கோயில்த்தொண்டெண்டெல்லாம் சேவை செய்யிறவையக் கடவுள் கடைசிவரையிலும் கைவிடார்..."

"பிரான்சில எங்கால தமிழக் கடவுள்?

"இல்லாட்டி, நாங்கள் ஒரு தமிழ்க்கடவுளை உண்டாக்கலாம் தானே? இஸ்ரேலில இருக்கிற கடவுள் தமிழ்ப் பகுதியிலயும் வரலாமெண்டால், ஏன் தமிழ்ப்பகுதியில இருக்கிற எங்கட கடவுள் பிரான்சில வரப்படாது?"

"இதென்னடா மச்சான் இதுவும் ஒரு பகிடியே?"

"உனக்கு ஒரு இழவும் தெரியாது. இலங்கையிலிருந்து அகதியளா வந்தவேயும், இமிக்கிரண்டாயிருக்கிறவேயும் சேந்து பிரான்சிலயும் ஒரு தமிழ்க் கடவுளை உண்டாக்கியிருக்கினம். விநாயகமூர்த்தி கோயில் கட்டி அதுக்காக ஒரு சங்கம் வைச்சு காசு சேத்து நாள் தவறாமல் பூசை செய்யினம். லண்டன், அமெரிக்காவிலயும் இப்பிடி முந்தியே கட்டி வைச்சிருக்கினம். இதையறிஞ்ச சிங்களப்பிள்ளையள், தாங்களும் ஆமுத்துகுமாரைக் கூப்பிட்டு விகாரையள் கட்டி எழுப்புகினம். இவையள் இஞ்சால பூசை வைச்சுக் கொண்டாட, அங்கால அவங்களும் இவேக்குக் கோசு போகாமல், புத்தஞ் சரணங்கச்சாமி, சங்கஞ் சரணங்கச்சாமி, தம்மஞ் சரணங்கச்சாமி' யெண்டு பவித்தாரங்கள் சொல்லிப் பூசை செய்யினம்"

"இந்தத் தொண்டு போதாதெண்டுதும் பஞ்சக கோவிந்தாவெண்ட கணக்கா இன்னொரு தொண்டும் நடக்குது, அது தெரியுமே?"

"அதென்னடா மச்சான், புதுத்தொண்டு?

"லண்டன், ஜேர்மனி, கனடா, நோர்வே சுவிஸ் இப்படியான வெளிநாடுகளிலயும் கலை இலக்கியச் சேவை செய்தவை வீடு வாசல், கார், ரீவி, றேடியோ வேண்டின-தோட களைச்சுப்போய் ஓய்வெடுத்திட்டினமெண்டு அறிஞ்ச பிறகு, பிரான்சில இருக்கிறவேயும் அவேக்குக் கோசு போகாமல் இலக்கியச் சங்கம் உண்டாக்கித்-தமிழுக்குத் தொண்டு செய்யினம். கருத்தோ, கொள்கையோ இல்லாட்டியும்தமிழுக்குத் தொண்டு செய்யிறதோட தவிச்ச முயலுக்குத் தடி வாக்கிறமாதிரி அகதியளாயிருக்கிறவேயின்ர நலனைப்பாதுகாக்-கப் புதுப்பிறவி எடுத்து நல்லாக் கயிட்ட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net



படுகினம். இப்படியெல்லாம் கலைக்கும், தமிழுக்கும், கடவுளுக்கும், கோயிலுக்கும் தொண்டு செய்யிற தியாகியின்ர தியாகி உலகமெல்லாம் பரவுறதைப்பாத்து மற்றவே பொறுமையில, 'உதெல்லாம் விசிலடிச்சான் குஞ்சுகள்' எண்டு சொல்லித்திரியினம்"

"அதாரது அப்பிடி சொல்ற பேயன்கள்?"

"அவேதான் உந்த முற்போக்குக்கலை இலக்கியகாறர்"

"அவேயின்ர முற்போக்கும் மண்ணாங்கட்டியும்"

"ஆனா மச்சான், அவங்கள் சொல்றதிலையும் கன நாயமிருக்கு. நாங்களால்லோ வேணுமெண்டு அவங்கட நாயத்தை மறைக்கிறனாங்கள்"

"என்ன நாயத்தைக் கண்டு போட்டாம்?

"நீ கோவியாதை நான் பகிடிக்குச் சொன்னனான்"

"அதுதானை பாத்தன் எடுத்ததுக்கெல்லாம் மாக்ஸியம், லெனிசியம், கம்யூனிசம், அந்த இஸம் இந்த இஸமெண்டு கத்திறது தான் அவேக்கு முழுநேர வேல. சவுந்தரராஜன், யேசுதாசன் அல்லது பாட்டுக்கு பாட்டுப் படிக்கிற தமிழ் சினிமாப்பாட்டுகாறரைப் போல சனங்கள் மத்தியில உவையால புகழ்பெற ஏலுமே? இஞ்ச செய்யிறவேயப்பற்றித்தான் விளம்பரம் போட்டிருக்கு இப்படியெல்லாம் வெளிநாடுகளிலையும் தமிழ்க் கலை வளக்கிறது தமிழருக்குப் பெருமைதானே? இது இந்தமொக்குக்கழுதையளுக்கு விளங்காது. இப்படியெல்லாம் கலை, கடவுள், கோயிலெண்டு தொண்டு செய்ய இவையெல்லாம் குடுத்துவைக்கவேணும்"

"எனக்கொரு சந்தேகம் வருகுது மச்சான்"

"என்ராப்பா அது இருந்தாப்போல. . . . ?"

"இருந்தாப்போலயில்ல கொஞ்நாளா மனதுக்க குடையுது"

"சரி சொல்லன்?"

"இலங்கையில் உப்பிடியான கலைத் தொண்டு கடவுள்த்தொண்டு கோயில்த் தொண்டு செய்த சனங்கள்தானே இனக் கலவரத்திலயும் அதுக்குப் பிறகும் முழுக்க முழுக்க அழிஞ்சது. அப்ப இந்தக் கடவுளும் கோயிலும் எங்கபோனது?"

"ம். . . . ?"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

"என்ன மச்சான் முழுசிரும்?"

"நான் நினைக்கிறன் அப்படியெல்லாம் தொண்டு செய்தவையில கடவுள் ஆக நேச ம்வைச்சிருந்தபடியால் அவையளுக்குச் சரி யான கஸ்டத்தைக் குடுத்து அவையைப் பர லோகத்துக்குக் கூப்பிட்டுத் தன்ரோட வைச் சிருக்கிறார்..."

"அட, அப்பிடியே சங்கதி? நீ சரியான ஒரு விண்ணன்தான்ராப்பா. இந்தச் சங்கதி யளக்கூட, என்ன சோக்காகக் கண்டு பிடிச் சிருக்கிறாய்."

"பின்ன நான் என்ன சும்மா லேசுப்பட் டஆளெண்டே நினைச்சனி?"

"அப்ப, நான் கடன்பட்டெண்டாலும் நாளைக்குக் கலைச்சங்கம் நடத்திற இன்னி சையிரவுக்கும், வாற நாயித்துக்கிழமைநட கிற கோமாளியளின்ர கலை விழாவுக்கும் கட்டாயம் போறதுதான்"

"அப்படியெண்டா, எனக்கும் சேத்து வீடி யோக் கடையில பத்து டிக்கேற் எடு. அப் பிடி எடுத்தா ஒரு டிக்கேற் காசு கழிவு"

"எட மச்சான், பாட்டுக்குப் பாட்டில நாங்களும் கலப்பமோ?"

"கலக்கிறதோவெண்டே கேக்கிறாய்? கட் டாயம் கலக்கிறதுதான். தமிழ்ப்படம் ஒன் டும் விடாமல் ஒழுங்காப் பாத்துப் பழகிப் போன எங்களுக்கு உதென்ன பெரிய காரி யமே?"

"அப்பசரி நான் முதல் எழுத்துச்சொல் றன் நீ 'டக்' கெண்டு பாட்டைத் துவக் குபாப்பம்?"

"சரி கேள்?"

"ஆ.....?

"ஆகா மெல்ல நட மெல்ல நடமே என்னாகும்"

"சரி, நி....?"

"நினைத்தேன் வந்தாய் நூறுவயசு"

"க..."

"கால்கள் ஏறுது மேலே"

"நீ.....?"

"நீ ஒரு காதல் சங்கீதம்"

"உன்னை மச்சான் கட்டாயம் ந தங்கப் பரிசு தட்டத்தான் போறாய். கலைகுனெண்ட பேரும் புகழும் எடுக்கப் போறாய்"

"அப்பிடியொண்டா, நாங்களும் ஒரு கலைமுதசச் சங்கம் துவங்குவமோ?"

"ஓமடா மச்சான் அச்சா ஐடியா"

"அப்ப, தமிழ்ச் சினிமாப் படங்கள்ல வாற முழுப்பாட்டையும் ஒழுங்கா மனப் பாடம் பண்ணுவம். அப்பதான் சங்கீத ஞானம் வரும். ,மூளையும் விரியும். பிறகு பாட்டும் எழுதலாம், நாடகமும் போட லாம்

"நாடகமோ?"

"ஏன் போட ஏலாதோ?"

"நீ யோசிக்கிறது எனக்குத் தெரியும் ஆயிரக்கணக்கான படங்கள் பாத்துத் தள் ளுறம் அதில ஒரு படத்துக் கதைய அப்பி டியே எடுத்து நாடகமாப் போடுவம்"

"ஓமடா மச்சான் அதுக்கென்ன, இதெ ல்லாம் கலைத்தொண்டு தானே?"

"அப்ப நான் போட்டுவாறன். பிறகு சந்திப்பம்"

"ஓமோம் படக்கெசட்டுகள் கவனம்

www.tamilrangam.net

பத்திரமாக் கொண்டு வந்து குடுத்துப் போடு"

"ஒகே...இனி இதுகள்தானே எங்கட சீவியம்"

"உதென்ன, கையில சுருட்டி வச்சிருக்கிறும்?"

"பேசும்படம், மொம்மை, தமிழ்ச்சினிமா"

"நீ சரியான ஆள்த்தான் மச்சான்.. ...படிச்சுப்போட்டுத்தா ஒருக்காப்பாப்பம்"

"இதுகள்ல நான் அவ்வளவு 'இன்றஸ்ற் இல்ல. என்ர மனிசிக்காறி படிக்கிறத்துக்காக எடுக்கிறஞன்."

"சரி, அவ படிச்ச பிறகு தாவன். என்ர மனிசிக்காறியும் பாக்கட்டுமன்"

"பின்ன என்ன, பொம்புளயளும் பாத்தா தானே பொச்சம் தீரும், அப்ப நான்வாறன்?"

"மச்சான் கதையோட கதையா ஒரு முக்கிய விசயம்....."

"என்ராப்பா, போகவிட்டுப் புறத்தால கூப்பிடுறும் சரி, என்னெண்டு சொல்லு?"

"நாங்கள் துவக்கப்போற கலைச்சங்கத்தைப்பற்றி நோட்டீஸ் அடிக்கிறதோட விளக்கமா இலங்கைப் பத்திரிகையளுக்கும் ஒரு விளம்பரம் குடு"

"இப்ப என்ன அவசரம்? சங்கத்தைத் துவக்கிப் போட்டு விளம்பரத்தைக் குடுப்பம்"

"இதின்ர உள்ச்சங்கதி உனக்கு விளங்கேல...."

"அதென்ன உளச்சங்கதி?"

"முதல்ல எங்கட குடும்ப ஆக்களை அங்கத்துவமாச் சேத்துப்போட்டு பிறகு எங்கட சொல் கேட்டு நடக்கிறவைய சேர்ப்பம். மிச்சத்தைப் பேந்து ஆறுதலாச் சொல்றன். இப்ப நீ விளம்பரத்தைக் குடு"

"உன்னுண மச்சான் நீ வலுகெட்டிக்காறன் தான்"

"எனக்குந்த முகந்தீயொண்டும் பிடிக்காது ....சரி மறந்து போகாதை.. இண்டைக்கே விளம்பரத்தைக் குடு."

"ஒக்கே..... ஒக்கே"

—•—

> **ஒவ்வொருவகைச சிந்தனையும் விதிவிலக்கின்றி ஒரு வர்க்கத்தின் அடையாள முத்திரையையே தாங்கியுள்ளது.**
> **— தோழர் மாவோ**

www.tamilrangam.net

# மு. தளையசிங்கமும் மாக்ஸியமும்

— சி. சிவசேகரம்

## ஓர் அறிமுகம்

ஈழத்து இலக்கியவாதியான திரு. மு. தளையசிங்கம் ஈழத்து தமிழ் இலக்கியத்திலே சில தாக்கங்களை ஏற்படுத்தியவர். போர்ப்பறை, மெய்யுள், ஏழாண்டுகால இலக்கிய வளர்ச்சி போன்றன இவர் எழுதிய நூல்களில் சிலவாகும்.

கருத்தியல் ரீதியாக இவர் இலக்கியத்தில் மேற்கொண்ட பயணம் இவரை விமர்சிக்க வேண்டியதோர் அவசியத்தினை மார்க்ஸியவாதிகளுக்கு ஏற்படுத்திக் கொடுத்தது. இன்று மார்க்ஸியத்திற்கு ஏற்பட்டிருக்கும் பெரும் நெருக்கடி, மார்க்ஸியவாதிகள் என்று கூறிக்கொண்டு மார்க்ஸியத்திற்கெதிரான தத்துவார்த்த, நடைமுறைச் செயல்களையுடையவர்களினால் ஏற்பட்டிருக்கும் திரிபு மயக்கம்தான். இத்தகையவர்கள்மாக்ஸியத்தை வளர்க்கிறோம், அதனைச் செழுமைப்படுத்துகிறோம் என்று கூறிக்கொண்டுநவ மாக்ஸியம், திருத்தல் மாக்ஸியம் என்று பலவற்றை மாக்ஸியத்திற்கெதிராக நிறுத்தும் போக்குகள் உருவாகியுள்ளன. தமிழகத்தில் எஸ். வி. ராஜதுரை, ஞானி போன்றோர் இத்தகைய போக்குகளை பிரதிபலிக்கின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

இந்தவரிசையில் ஈழத்திலே மாக்ஸியத்தைக் கடக்க வேண்டும், மாக்ஸியம்போதாது எனவே அதை அழித்து புதிய தத்துவத்தை ஸ்தாபிக்க வேண்டும் என்னும் முனைப்பில் தனது நியாயப்படுத்தலை விஞ்ஞானத்திற்குப்புறம்பாக நிகழ்த்தி முடிவில் கருத்து முதல் வாதத்தையே சென்றடையும் திரு.தளையசிங்கத்தினை ஏற்கனவே ஈழத்தின் மார்க்ஸிய அறிஞரான கலாநிதி கைலாசபதி அவர்கள் விமர்சித்து மாக்ஸியத்திற்குப் புறம்பான இப்போக்கினைக் கண்டித்து ஒரு தத்துவப்போர் நிகழ்த்தியுள்ளார். எனினும், இன்றும் சிலர் மு.தளையசிங்கத்தை ஒரு மாக்ஸியவாதியாகக் கருதிக்கொண்டு தம்மையறியாமலே அவரின் நூலின் வாயிலாக தாமும் கருத்துமுதல்வாத முடிவுகளுக்-கேவந்து சேர்கின்றனர்.

வரலாற்றில் காலம் காலமாக, மாக்ஸியத்திற்கெதிராக தலையெடுத்த இப்போக்குகளை எல்லாம் முறியடித்துக் கொண்டுதான் மாக்ஸியம் இன்று வளர்ந்துள்ளதுஎனவே தான் கலாநிதி சி.சிவசேகரம் அவர்களின் 'மாக்ஸியமும் தளையசிங்கமும்' என்ற விமர்சனத் தொடர் கட்டுரை தேடலில் பிரசுரிக்கப்பட்டது.

–தேடல்–

## மு. த. வும் மெய்யியலும் விஞ்ஞானமும்

ஹெகலை மாக்ஸ் தலைகீழாக்கினார், மாக்ஸைத் தலைகீழாக்கி மீண்டும் ஹெகலிடம் கொண்டுபோகலாம் என்கிற மாதிரி இந்த தலைகீழாக்கும் விஷயத்தை இயந்திர ரீதியாகப் பயன்படுத்துகிறார் மு. த.

கருத்துமுதல்வாதம் என்றால் கலை, இலக்கியம், தத்துவம் ஆகிய துறைகட்கு முதலிடம் கொடுத்தலும் சிந்தனையைச் செயல் தொடர்வதாகக் கூறுவதும் (போ. 89) என்று விளங்கிக் கொண்டிருக்கும் மு. த. வை நினைத்துச் சிரிக்கவும் முடியாமலிருக்கிறது. இவ்வளவுக்கும் சிந்தனைக்கும் செயலுக்குமிடையிலான உறவு, கொள்கைக்கும் நடைமுறைக்கும் உள்ள உறவு போன்ற விஷயங்களை எவ்வளவு எளிமையாக எவருமே விளங்கிக்கொள்ளக்கூடிய முறையில் மாக்ஸியவாதிகள் எத்தனையோ பேர் எழுதியிருக்கிறார்கள்!

விஞ்ஞானம் பற்றிய முட்டுகட்கு முக்கியமாக ஆதர் க்ளாக் (Arthur Clark) என்கிற விஞ்ஞானப் புனைகதை ஆசிரியரை ஆதாரம் காட்டுமளவுக்கு மு. த. வின் விஞ்ஞானம் இருக்கிறது.

சடத்துக்கும் உயிருக்கும் நினைவுக்கும் அப்பாற்பட்ட பேர்ஞான நிலையைக் கண்ட அநுபூதி மகான்களை மாபெரும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

விஞ்ஞானிகள் என்று வர்ணித்துவிட்டு விஞ்ஞானிகள் அந்த நிலையை இன்னும் தொடவில்லை என்று கூறும் மு. த. வுக்கு அந்தப் பேர்ஞான விஞ்ஞானமும் இந்த 'அஞ்ஞான' விஞ்ஞானமும் ஒரே அடிப்படையினவா ஒத்த நோக்குடையனவா என்பதையெல்லாம் கவனிக்கமுடியவில்லை. சைவ சித்தாந்தமா எலும்பு முறிவு வைத்தியமா சிறந்தது 'என்கிறமாதிரி எப்படித்தான் சம்பந்தமற்ற விஷயங்களை ஒப்பிட முடிகிறதோ தெரியவில்லை.

மு. த. அத்வைதத்தின் மீது வைத்துள்ள நம்பிக்கை, காந்தி, விநோபா, போன்றோர் காட்டும் அரசியல் — சமுதாய மார்க்கம், ராமகிருஷ்ணர் முதலாக அரவிந்தர் வரையிலானோரின் ஆத்மீகக் கருத்துக்கள் மீதான பிடிப்பு என்பன சர்வமத ஒற்றுமை, பொருள்முதல்வாதத்துக்கும் கருத்து முதல்வாதத்துக்கும் முடிச்சுப்போடும் மெய்முதல்வாதம் ஆகிய நிலைப்பாடுகட்கு அவரை இழுத்து வந்துள்ளது. ஆனால் ''புதிய யுகம் வந்துவிட்டது'' என்று ஆர்ப்பரிக்கும் அளவுக்கு அவரால் சூழலின் யதார்த்தத்தை உணரவோ தன் சிந்தனையை முழுமைப் படுத்திக்கொள்ளவோ முடியாமல், சர்வோதயம் என்ற மொட்டைச் சந்துக்குள் முடங்கி விடுகிறார்.

## மு. த. வின் இலக்கியப் பார்வை

தரமற்ற இலக்கியம் பற்றி மு. த. வின் கோபம் நான் அவருடன் பெருமளவும் பகிர்ந்து கொள்ளக்கூடிய ஒன்று. ஆனால் அவருடைய இலக்கியக் கருத்துக்களுடன் உடன்பாடு காணுவது எனக்கு மிகவும் சிரமமானது.

பூரண இலக்கியம் என்று சகல துறைகளையும் சகல இலக்கிய வகைகளையும் மட்டுமன்றிச் சகலவிதமான சிந்தனைப்போக்குகளையும் இணைக்கும் எழுத்தாளர் இயக்கம் பற்றிப் பேசும் மு. த. இத்தகைய ஒன்று வர்க்கபேதமற்ற சமுதாய மொன்றில் அல்லது அதை அணுகும் சமுதாய அமைப்பிலேயே சாத்தியம் என்பதை உணர்ந்ததாகத் தெரியவில்லை.

சமுதாய மாற்றங்களையொட்டிக் கலை இலக்கியத்தில் மாற்றங்கள் ஏற்படுவது பற்றிய மாக்சிய நிலைப்பாட்டை வைத்தே சோஷலிசம் வெற்றிபெற்ற சமுதாயங்களில் இன்னும் முதலாளித்துவ சமுதாயத்தில் உருவான பழைய கலை வடிவங்கள் தானே உள்ளன என்று கேள்வியெழுப்புகிறார் மு. த. இது நியாயமான கேள்வி. ஆனால் பதில் மு. த. விரும்புவதுபோல சோஷலிச சமுதாயத்திலுள்ள சிந்தனைத் தேக்கமல்ல. முதலாளித்துவ சமுதாயத்தில் கலைக்கும் இலக்கியத்துக்கும் என்ன



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

நடக்கிறது என்பதைப் பார்த்தால் சோஷலிச சமுதாயத்தில் நடப்பது என்னவென்று விளங்கும். மு. த.. வுக்கு சீனாவைக் 'கலாச்சாரப் புரட்சி' வரையும் தான் காணமுடிந்தது. இன்று அந்தக் கலாச்சாரத் தேக்கத்தை உடைத்துக்கொண்டு சீனக் கலைஞர்கள் கண்டுள்ள எழுச்சியை மு. த. எதிர்பார்த்திருக்க மாட்டார். புதிய கலை வடிவங்கள் பற்றிப் பேசுமுன் புதிய கலை வடிவங்கள் ஏன் தேவைப்படுகின்றன என்று அறிய வேண்டாமா? சோஷலிச சமுதாயத்தால் பழைய கலைவடிவங்கள் மூலமே தன் தேவைகளை நிறைவுசெய்யவும் அவ் வடிவங்களாற் செய்யக்கூடியவை யாவும் நிறையவே இருக்கும் போது புதியவடிவங்கட்கான தேடல் பற்றி அதிகம் ஊக்கம் இருக்காது. ஆயினும் சீன ஓவியத் துறையில் புதிய பரிமாணங்கள் காணப்பட்டுள்ளன. மரபை நவீனத்துடன் இணைப்பதில் சீனக்கலைஞர்கள் சாதனைகளைச் செய்துவருகிறார்கள். 'புதுமை புதுமைக்காகவே' என்ற மாதிரி நிலை அங்கே இல்லை. மற்றுமொரு விஷயம்: சீனாவில் சமுதாயம் பின்தங்கிய அரை நிலமான்ய சமுதாயமாக இருந்து முன்னாலே பாய்கிற ஒன்று. அங்கே நிரப்பவேண்டிய இடைவெளிகள் பல உள்ளன. இதுபற்றி அவர்கள் வெட்கப்படவும் இல்லை, தளர்ந்துவிடவும் இல்லை. கலை - இலக்கியம் பற்றிய கேள்வியை உற்பத்தி முறைகள் விஷயத்திலும் எழுப்பலாமே! மேற்கில் அடிமைச் சமுதாயம் நிலமான்ய சமுதாயமான போது உற்பத்தி உறவுகளில் ஏற்பட்ட மாற்றம் எத்தன்மையது? அதையொத்த மாற்றம் உற்பத்தி முறைகளில் நேர்ந்ததா? ஆனால் நிலமான்யம் முதலாளித்துவமானபோது உற்பத்தி உறவுகளில் மட்டுமன்றி உற்பத்தி முறைகளிலும் மாபெரும் மாற்றங்கள் நேரவில்லையா? சோஷலிச மாற்றம் முக்கியமாக உற்பத்தி உறவுகள் தொடர்பான ஒன்று. நவீன விஞ்ஞானம் (அதாவது முதலாளித்துவ வளர்ச்சியை யொட்டி ஏற்பட்ட அறிவு வளர்ச்சி) இதுவரை தந்த தகவல்களையே மனிதன் பூரணமாகப் பயன்படுத்தவில்லை. முதலாளித்துவம் சுற்றுடல் பற்றிய விஞ்ஞான ரீதியான அறிவை முறையாகப் பயன்படுத்த மறுக்கிறது. அதன் குறிக்கோள் இலாப வேட்கை. எனவே மேலும் மேலும் லாபம் குவிக்குமுகமாகவே புதிய விஞ்ஞான அறிவு, புதிய தொழில் நுட்பம் என்று அலைகிறது. இங்கே சோஷலிச சமுதாயம் குறைந்த தொழில் நுட்பத்தின் உதவியுடனேயே கூடிய சாதனைகளைப் புரியும் வேறுபாடு தெரியவில்லையா? எனவே புதிய அறிவுக்கான தேடலில் முதலாளித்துவம் நிறையத் தகவல்களையும் கருவிகளையும் குவிக்கலாம். மனித சமுதாயத்துக்குப் பயன்படும் தகவல்கள், கருவிகள் என்று பார்த்தால் சோஷலிச சீனமே உயர்ந்த விளைபயனைக் (efficiency) காட்டுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

மு. த. வின் மெய்யுள், உருவத்தில் தமிழுக்குச் சற்றே புதுமையாக இருக்கலாம். ஆனல் இவ்வகையான எழுத்துக்கும் அது பிரகடனம் செய்யும் 'மெய்' இயல்பு ஒரு மிகையான அடைமொழியே. (ஹென்றி மிலர் (Henry Miller) எழுதிய நடையும் இத்தகைய ஒன்று தான். மிலரின் புத்தகங்களின் ஆபாசம் காரணமாக அவை பெற்ற செல்வாக்குத்தான் அதிகம் என்று நினைக்கிறேன்.) செய்யுள் உரை நடை என்ற வித்தியாசங்களையும் மதிக்காதது இந்த மெய்யுள் என்று மு. த. கூறுகிருர். ஆனல் புதுக்கவிதை என்ற பேரில் வருபவை அந்த வித்தியாசங்களை மட்டுமன்றி அர்த்தம் அனர்த்தம் என்ற பேதத்தையும்கூட சில சமயம் 'கடந்து' விடுகின்றன. மு. த. இலக்கியத்தின் உருவப் பிரச்சனைக்குள் தடுமாறுகிருர் என்றே அவரது மெய்யுள் பற்றிய கருத்தும் எழுத்துக்களும் என்னை எண்ண வைக்கின்றன.

மோசஸ், புத்தர், கிருஷ்ணர், யேசு, முகம்மது, ராமகிருஷ்ணர், சங்கரர் ஆகியோரை உண்மைக் கலைஞர்கள், பெருங் கலைஞானிகள் (மெ. 268) என்று கொண்டாடும் மு. த. கலை என்று கருதுவதும் என்னளவில் கலையென்று என் அறிவுக்கு எட்டியதும் மிகவும் வேறுபட்ட விஷயங்கள்.

மாக்ஸியக் கலைக் கண்ணோட்டம்பற்றிப் பேசும் மு. த. கலைச் சிருஷ்டிகளின் தரம் அந்தந்தக் காலத்துப் பொருளாதாரப் போக்கின் செல்வாக்கிலேயே தங்கியிருக்கிறது என்பது மாக்ஸிய நிலைப்பாடு என்ற விதமாகக் (போ. 215) கருத்தை முன்வைக்கிருர். இது மாக்ஸிய நிலைப்பாட்டை அவர் புரிந்து கொண்ட விதமா அல்லது மற்றவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் விதமா?

''பீட்னிக்ஸ் (Beatniks), ஹிப்பிகள் (Hippies), என்ற போக்குகளை எல்லாம் இனி வரவிருக்கும் ஒரு பெருந் தத்துவத்தின் வருகையைக் குறிக்கும் சமிக்ஞைகள்'' என்று கருதும் அளவுக்கு, (போ. 221) ஜன்னியில் ஒருவன் உளறுவதற்கும் ஒரு கவிஞனின் கவிதை வீச்சுக்குமிடையிலான வேறுபாடு தெரியாத நிலையிலா மு. த. இருக்கிருர்?

அறுபதுகளில் ஆனந்த விகடன் காட்டிய பணமுடிச்சைப் பார்த்து மயங்கிய இலக்கிய வியாபாரஞ் செய்ய ஆரம்பித்த ஜெயகாந்தனிடம் சத்தியத் தேடலைத் தரிசிக்கிருர் மு. த. (போ. 235). ஜெயகாந்தனுடன் மு. த. தன்னையும் மு. பொன்னம்பலத்தையும் சேர்த்துக் காணுகிருர். ஆனல் என்னல் கலையென்ற வகையில், மு. த. வின் எழுத்துக்களை உயர்வாகக் கருதமுடியவில்லை. மு. பொ. என்றுமே என் அபிமான எழுத்தாளரல்ல.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

## மு. த. வும் அதிருப்தியும்

கைலாசபதி மு. த. அதிருப்தியை முக்கியப்படுத்துவதைச் சுட்டிக்காட்டியதையிட்டு மிகவும் கோபித்துக்கொண்ட மு.பொ. தன் கட்டுரையில் (அலை - 19) "அப்படியானால் மாக்ஸை நிஹிலிய எதிர்ப்பாளர், etc." என்று கூறமுடியாதா என்று வினாவியிருக்கிறார். ஒரு கொள்கை இன்னொன்றன் எதிர்ப்பாக அமைவது ஒரு விஷயம் அது அதிருப்தியையே தன் ஆதாரமாக வைத்திருப்பது இன்னொரு விஷயம். மாக்ஸின் முதலாளித்துவ எதிர்ப்பு, கருத்துமுதல்வாத எதிர்ப்பு என்பன அவரது சமுதாய உணர்வு அவதானங்கள் ஆகியவற்றில் தங்கியிருந்தது. முதலாளித்துவத்தையோ, கருத்து முதல் வாதத்தையோ, மாறுநிலையியலையோ எதிர்ப்பதாகச் சொல்லும் எல்லாவற்றையும் மாக்ஸ் தனக்கு ஆதரவாகக் கொள்ளவில்லை. மு. த. வின் பலவீனமே முன்பு சொன்னதுபோல பீட்னிக்குகளையும் ஹிப்பிகளையும் முறையாக ஆராயாமலே தன் சத்திய யுக வசந்தத்தின் வருகை கூறும் பறவைகளாகக் கண்டதில் தெரியவில்லையா?

மு. த. வெறுமே ஹிப்பி, பீட்னிக் வகையறாக்களுடன் நிற்கவில்லை. "அதிருப்தி — எல்லாருக்கும் பொதுவான பொதுக் காரணமாக அதை மட்டும்தான் சொல்லலாம்" என்று வலியுறுத்துவதுடன் கலாச்சாரப் புரட்சியும் அதிருப்தியின் வெளிப்பாடு என்ற வகையில் அதை வரவேற்கிறார். சமயத்தை மறுக்கும் பொருள் முதல்வாதமும் "ஆன்மிக" அடிப்படையில் கலக்கும் காலகட்டம் வந்துவிட்டதற்கு ஆதாரமாக ல. ச. ச. கட்சியில் இளம் வட்டத்தினர் (இன்றைய நவசமசமாஜிகள்) தோன்றியமை, கருணாநிதிக்கு எதிராக அ. தி. மு. க. தோற்றம் (இந்திரா அம்மையார் இதை மிகவும் வரவேற்பார்), ஆகியன கூடத் தென்படுகின்றன (மெ. 155-156).

ஒரு விஷயத்தை ஆழமாக அவதானிக்காமல் மேலோட்டமாகப் பார்த்து முடிவுகட்டுவதன்போது பனிப்புகைகூட காட்டுத்தீயின் வருகையை அறிவிப்பதாகவே தெரியும்.

### முடிவுரை

மு. த. வின் தவறான முடிவுகள் பல. அவர் மாக்ஸியத்தை விமர்சிக்க முற்பட்டது மாக்ஸிய அறிவின் அடிப்படையில் அல்ல. ஸ்ரீ ல. சு. க. ஆட்சியை சோஷலிஸம் என்று அழைக்குமளவுக்கு அவரது மாக்ஸிய அறிவு உள்ளது. வரலாற்றை அவர் புரிந்துகொண்ட முறையும் விளக்கிய முறையும் பலவீனமானவை. அவரது தவறான விளக்கங்களை வரிசைப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

படுத்திக்கொண்டு போனால அதற்கு முடிவே இராது. ஒரு வேளை என் மாக்ஸிய சார்பின் காரணமாக இருக்கலாம்; அவரது எழுத்தில் மாக்ஸியத்தை எதிர்க்கும் நோக்கம் அவரது உலகப் பார்வையைப் பெரிதும் பலவீனப்படுத்திவிட்டது. மாக்ஸியத்தைத் தவிர்த்து சோஷலிச உலக அமைப்பைக் கொண்டுவர ஆன்மீக மார்க்கத்தைத் தேடுகிறார். ஆனால் அவரால் திசைகாண முடியாமல் சர்வோதயம் என்ற பழைய சூத்திரத்துக்குள் (ஓரிரு புதிய கோஷங்களுடன்) முடங்கிவிடுகிறார். மாக்ஸியவாதிகள் கூறும் சோஷலிச உலகம் பற்றிய கருத்தை அவர் ஏற்றாலும் உலகின் யதார்த்தத்தை அவரால் புரிந்து கொள்ளமுடியவில்லை. ஆன்மீகத்தைத் துணைக்கழைத்து ஒரே தாவலில் சோஷலிசத்துக்கும் மோட்சத்துக்கும் தாவ முனைகிறார். முடியவில்லை.

மு. த. வின் நோக்கங்களைக் கேள்விக்குட்படுத்த நான் விரும்பவில்லை. ஆனால் அவரது நோக்கங்கள் என்னவாயிருப்பினும் அவர் காட்டமுனையும் பாதை நிச்சயமாக சோஷலிசத்துக்கு அல்ல. மோட்சம், முக்திபற்றி எனக்கு அக்கறை இல்லை. மண்ணுக்கும் காற்றுக்கும் கடலுக்கும் உரியது என் தேகம். அதோடு 'நான்' முடிந்துவிடும். இந்த உயிருக்கு ஆத்மா என்று நிரந்தரத் தன்மை வழங்கவேண்டிய அவசியம் எனக்கில்லை. என் கண்முன் தெரிகிற விஷயங்கள் முழுமையல்லவாயினும் என்னால் உணரவும் அனுபவிக்க முடிகின்றவையே மனித இனம்பற்றி ஒரு சகோதரத்துவத்தை நியாயப்படுத்தப் போதுமானவை. எனக்குத் தெரியமுடியாத விஷயங்கள் பற்றிய பாசாங்கு அவசியமற்றது.

ஆன்மீக தொடர்பான விஷயங்களை விருப்பி வாசிக்கவும் செய்கிறேன். அவை சமுதாய ரீதியாகத் தரும் விளக்கங்கள் என்னைத் திருத்தி செய்யவில்லை. என்றால் அவற்றின் ஆழத்தையும் கட்டுக்கோப்பையுங் கண்டு வியக்காமல் இருக்கமுடியாது எனினும் என்தேடல் ஆன்மீக ஈடேற்றம் தொடர்பான ஒன்றல்ல. உடனடியாக அதை விட முக்கியமான காரியங்கள் என் முன் இருக்கின்றன. எனக்குள் முடிவற்ற ஆன்மா என்று ஒன்றிருந்தால் அது தானே தன்வழியைக் கண்டுபிடித்துக் கொள்ளட்டும். முதலில் சக மனிதனுக்கு நடக்கிற கொடுமைகளுக்கு முடிவு கட்டுவோம். ஆன்மா முடிவற்றது என்றால் அது சில காலம் பொறுத்திருக்கலாம். அது இந்த உடலோடேயே முடிகிற ஒன்றானால் அத்தோடே முடியட்டுமே. என்ன நஷ்டம்?

நல்ல விஞ்ஞானிகள் பலர் இறை நம்பிக்கையாளர்களாக இருந்திருக்கிறார்கள். அவர்கள் தம் சமயச் சார்பை விஞ்ஞான அறிவுத் தேடலில் பயன்படுத்தியே விஞ்ஞானத்தை விருத்திசெய்யவில்லை. விஞ்ஞானத்துக்குச் சமய விளக்கங்கள் கொடுக்க முயலும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

போலித்தனம் கிழக்கிலும் மேற்கிலும் நடக்கிறது. அதேபோல் சமய நம்பிக்கைகளை விஞ்ஞான ரீதியாக நியாயப்படுத்தும் முயற்சிகளும் நடந்து வருகின்றன. இறை நம்பிக்கையுள்ள விஞ்ஞானி நேர்மையாளனாக இருக்கலாம். ஆனால் விஞ்ஞானத்தையும் சமயத்தையும் போட்டுக் குழப்புங் காரியங்களில் நேரான சிந்தனை இருப்பதாகத் தெரியவில்லை.

மு. த. மாக்ஸியம் சாகும் நாள் வந்துவிட்டது என்று பிரகடனம் செய்து பல காலமாகிவிட்டது. அவர் இதோ வந்துவிட்டது என்ற சத்திய யுகம் இன்னும் வந்தபாடில்லை. கிறிஸ்துவுக்கு முன்பு இரண்டாயிரம் வருஷம் முன்பிருந்தே எதிர்பார்த்து வரும் தேவராச்சியம் கூடத்தான் இன்னும் வரவில்லை. என்ன செய்வது !

தவறிப்போன தேடல் மு. த. வினது. ஆனால் மு. த. வை முதன்மைப்படுத்த முனையும் சிலரது போக்கு மாக்ஸிய எதிர்ப்புக்குப் பயன்படும் வலுவான சிந்தனைக் கழி எது என்று உக்கிப்போன சிந்தனைகளுள் உருப்படியாகத் தெரியும் ஒன்றைத் தூக்குப் காரியம்தான்.

நன்றி "தாயகம்"

---

பெயர் முகவரியிடப்படாததும் கண்ணியக்குறைவான வார்த்தைகளுடன் கூடியதுமான கடிதங்கள், மற்றும் விமர்சன ஆக்கங்கள் எதுவும் எமது பரிசீலனைக்காகவோ, அல்லது பிரசுரிப்பதற்காகவோ எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

# இனியும் வேண்டாம் மவுனம்.

அந்தத் தெருவின்
நிசப்தத்தினூடே
ஓர் மனித உருவமொன்று...

ஓ!
இவற்றைப்பேசும்
சுதந்திரம்
எம்மவர்களால்
மறுக்கப்பட்டுள்ளது,
உரக்கச் சொல்லாதே
உரக்கச் சொல்லாதேயென்று
எனதருமைத் தோழர்களின்
புதை குழியினுள்
ஒலித்த
ஈனக்குரல்கள்
என் செவிகளினுள்
ஒலித்தன
ஒலித்துக் கொண்டேயிருக்கின்றன,
எனினுமென்
மனச்சிறகினுள்ளே
பற்பல கேள்விக்கணைகள்
அந்த மனிதரைப்பற்றி..
எப்போ
எப்படி
எவரிடம்
என் மனச்சிறகைத்திறந்து
இவ்வுண்மையை
உரைப்பேன்..?

எம்மக்களோ
தம்மால்
தமக்கென
உருவாக்கப்பட்ட
விலங்குகளால்
கட்டப்பட்ட நிலையில்
சிந்தித்தவர்களோ
புதைகுழியினுள் ...
சிந்திக்கத் தெரிந்தவர்களோ
வாய்பேசா
மௌனிகளாக...

ஓ! மக்களே
நிச்சயம்
இனியும் வேண்டாம்
மௌனம்.
எம் அடுத்த
சந்ததியாவது
உண்மைக்காக
உண்மையான விடுதலைக்காக
போராடட்டும்.

— இரவி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

## உரைகல்.

# போகிற போக்கில்..

— யாழ்ப்பாணன்

கலைவாதி :- இந்திய நடிக நடிகை பாடகர்களை வருவித்துக் கலைச் சேவை செய்வோர் இலங்கைக் கோமாளிகள் கலை நிகழ்ச்சி நடத்தி வெற்றிவாகை' சூடியதுபற்றி என்ன நினைக்கிறீர்?

இலக்கியவாதி- ஈழத்துக் கலைஞர்களை வைத்து நடத்தப்படும் நிகழ்ச்சி வரவேற்கப் படவேண்டும். ஈழத்துத் தேசியக் கலைகள் அவற்றின் யதார்த்த பூர்வக் கருவூலங்களைத் தாங்கி வெளிவர வேண்டுமேயன்றி முசுப்பாத்திகளாகவல்ல. தரங்கெட்ட தமிழ்ச்சினிமாவை நிராகரிக்காதவரைதரமான கலை ஒருபோதும் சாத்தியப்படாது.

ஒருவர் :- நீ ஒரு திறம் பகிடி விடு பாப்பம்?

அடுத்தவர். :- மார்க்ஸ், எங்கால்ஸ், லெனின் மூவரும்தான் உலகிலே மிகச் சிறந்தமுட்டாள்கள்.

கலைஞர் :- எப்படி நாங்கள் நடத்தின கலை நிகழ்ச்சி?

கலைப்பிந்தர்- முதல்லோ கலை நிகழ்ச்சி. கனகாலத்துக்குப் பிறகு என்ர ஆசைதீரக் கை தட்டி விசிலடிச்சது உங்கட கலை நிகழ்ச்சியிலதான்.

சினிமரசிகர் :- தமிழ்ச்சினிமாப் படங்கள் உலகப்படவிழாவில் எப்போதும் தகமையற்றுப் போய்விடுவதன் காரணம் என்ன?

கதாசிரியர் :- கலை, இலக்கியம் என்னவென்றே தெரியாத விரல் சூப்புகிற குழந்தைப்பிள்ளைகளெல்லாம் கதாசிரியர்கள் போல் வெளிக்கிட்டதாலும், சமுதாயத்தைப் புறக்கணித்த கற்பனா உலக மாயாஜாலங்களைக் காட்டிப் பணம் பறிக்கிற முதலாளித்துவ வியாபாரிகளாலும் வந்த வினை இது. மிக உன்னத கலையான இது இந்த வியாபாரிகளிடமிருந்து விடுதலையடையாதவரை தமிழ்ச்சினிமாப் படங்கள்மட்டுமல்ல, எந்தக் கலைஇலக்கியங்களும் தரங்கெட்டு உருப்படாமலே அழிந்துபோகும். திரைப்படக்கலையும் தமிழ்ச் சினிமாவும் பற்றி எழுத்தாளர் அறந்தை நாராயணன் எழுதிய நூலைத்தேடிஎடுத்தாவதுபடியுங்கள்.

www.tamilrangam.net

சிஷ்யன் :- கடவுள் எங்கே இருக்கிறார்?

குரு :- எங்கும் எதிலும் வியாபித்திருக்கிறார்

சிஷ்யன் :- இலங்கையில ஆமியும் ஆக்களும் சுடுபட்டேக்க அவைக்குள்ள இருக்-கிற கடவுளுக்கும் அந்தச் சூடுபிடிக்கும் தானே? அப்ப, கடவுள் சாகமாட்டாரோ?

குரு :- கடவுள் சாகமாட்டார். அவர் சுட்டவையோடும் இருப்பார்சுடு பட்டுச் செத்தவையோடும் இருப்பார்.

சிஷ்யன் :- அப்ப, கடவுளும் கடவுளும்,நான் சுடுகிறதும் சுடப்படுகிறதும், அப் படித்தானே?

குரு :- ம்.........?

ஒருவர் :- பிரான்சிலையும் சில தமிழர் செத்தவீட்டுக்கு அடிக்கிற நோட்டீசுகளிலயும் 'வேளாண்குலம்', 'வேளாளர்குல', 'சைவ வேளாண் குலம்', 'கிறிஸ்தவ வேளாளர் குலம்', என்றெல்லாம் போட்டி போட்டுக்கொண்டு விளம்பரம் போடுகினமே., வெக்கமில்லையா

மற்றவர் :- கள்ளுவெறி, காம வெறி, குடிவெறி, மோகவெறி, மதவெறி, குல வெறி, சாதிவெறி, இனவெறி, தேசியவெறி, ஆகிய வெறிகள் முழுக்க முழுக்க நிலப்பிரபுத்துவ எச்சங்கள், முதலாளித்துவத்தின்கொடிய ஆயுதங்கள். இந்த வெறியுடன் செயல்படும் நாடுகள் எப்படியெ-ல்லாம் சின்னாபின்னப்பட்டுச் சீரழிந்து படு நாசமாகின-நாசமாகின்றன என்ற வரலாற்றை உணர்ந்தால் இந்த அநாகரிக - மான- அசிங்கமான -அற்பத்தனமான கொடிய ஆசை இங்க தலை எடுக்காது. யாழ்ப்பாணத்து மாவிட்டபுரம், சங்கானை, - சாவகச்சேரியில் நடைபெற்ற கொடிய ஆசைபிடித்த ஜாதி வெறியர்கள் தோற்றுப்போன வரலாறு தெரிந்ததே. அப்படியிருந்தும் இந்த வெட்கங்கெட்ட நினைப்போடு வெளிநாடுகளில். இருப்பவர்கள் ஈற்றில் வெட்கப்பட்டே போவார்கள்.

வித்துவான் :- ஸ்டாலினுக்கு எதிராகச் சில பத்திரிகைகள் அவதூறு செய்வதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பண்டிதர் :- உலகத்தின் தலைவிதியை மாற்றி முதலாளித்துவ ஏகாதிபத்தியக்-கோட்டையையே நொறுக்கி எறிந்துவிட்ட ஒக்டோபர் சோசலிஸப்புரட்சியையும், இரண்டாவது உலக மகாயுத்தத்தின்போது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

உலகமக்களைக் காப்பாற்றிய சோவியத் ரஸ்யாவின் மகோன்னத தியாக சாதனைகளையும் முறையாகத் தெரிந்துகொண்டால் ஸ்டாலின் என்ன பாத்திரம் வகித்தார் என்பது புலனாகும். ஸ்டாலின் ஒரு தனிமனிதர் அல்லர். அவர் உலக வியாபகமான பொதுவுடமைவாதி, சிறந்த மார்க்ஸியவாதி, எனவே அவரின் நாமத்துக்கு எவரும் களங்கம் சுமத்த முடியாது. அவர் எதிரிகளை மட்டுமல்ல, துரோகிகளையும் அம்பலப்படுத்தி நாட்டைக் காப்பாற்றிய பெரும் பங்காளி.

வாசகர் :- இலக்கியத்தையும் அரசியலையும் ஏன் போட்டுக்குழப்பியடிக்கவேண்டும்?

எழுத்தாளர் :- சமுதாயத்தைப் புறக்கணித்த இலக்கியம் எங்காவது உண்டா? கிடையாது. அரிசியில்லாமல் சோறு சமைக்கும் மந்திரவாதி யார்? அரசியல் இலக்கியத்தின் உயர்ந்த நிலை என்பதைத் தெரிந்துகொள்ளமுடியாதவர்களும் அரசியற் செய்திகளையே தங்கள் கதைகளுக்குக் கருப்பொருளாகப் பாவிக்கிறார்கள். அரசியல் எந்தத் தனிமனிதன் வாழ்க்கையிலும் பின்னிப் பிணைந்திருப்பதே இதற்குக் காரணம்.

அபிமானி :- தமிழர் கூட்டணித் தலைவர்கள் அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் படுகொலை பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

தேசாபிமானி :- கெடுகுடி சொற்கேளாது, சாகுடி மருந்துண்ணாது, மாஜி மந்திரி ராசதுரையின் கைச்சரக்கான 'துப்பாக்கிக்குண்டு விளையாடும் பந்து' இப்போ ஜனநாயகம் பேசுகின்றது. தமிழர் பண்பாடு, பாசம், அன்பு, நேசம், கலை, கலாச்சாரம் உலகெங்கும் கொடி கட்டிப் பறக்குது. ஆயுதம் ஏந்தாத கூட்டணித் தலைவர்களுக்கு ஆயுதங்கள் ஜனநாயகப் பாடம் கற்பித்திருக்கின்றன. பெரியார் செல்வநாயகத்தார் சொன்ன கடவுளும் காப்பாற்றவில்லை. சுத்த வீரன் கண்ணில் ஒளித்திருந்து மிளகாய்ப் பொடி எறியப்பட்டிருக்கிறது.

www.tamilrangam.net

# இவர்கள்...



கனவு கண்டு விழித்ததுபோல்
ஒரு வேகம்....
திடுதிப்பென
அந்தகார இருளில்
இருந்தவர்கள் எல்லோரும்
ஓர் நாள்
விழித்துக் கொண்டார்கள்.
விழித்தவர்கள்
சற்றுநிதானமாக
அல்ல,
மிகவேகமாக எழுந்து
நடக்க முயன்ற போது..
அவர்களால்
முடியவில்லை.
விழிப்பு சிந்தனையில் இல்லை
என்பதை
செயல்கள்
வெளிச்சம்போட்டுக்
காட்டியது.
தெளிவு
பார்வையில் இல்லை
என்பதால்
பாதை அவர்களைத்
தடம் புரள வைத்தது

சுயமாக சிந்திக்கும்
ஆற்றலை இழந்து
மற்றவர்களை
நிந்திப்பதில்
விழித்துக் கொண்ட
இவர்கள்,
நிஜமாக
விழித்தெழவில்லை.
அப்படி
விழித்துக் கொண்டதாக
கற்பனை செய்தார்கள்
இவர்களிடம்
விழித்துக் கொண்டவையோ,
பதவி
அதிகாரம்
ஆத்திரம்
ஆவேசம்
வரட்டு நியாயங்கள்
வரட்டுக் கௌரவம்
என்பவைதான்
உண்மை
இவர்களிடம்
எப்போதும் உறங்கிக் கொண்டே.....


**- வித்யா**

www.tamilrangam.net

## சிறுகதை

# "கோரப்பலி"

### கௌதமன்



'தண்ணி.....தண்ணி' என்று முனகியபடியே அந்த அறையின் ஒரு மூலையில் சுருண்டு போய்க் கிடந்தான் கதிரன்.

அறை வெறுமையாக இருந்தது. அவனை மாறி மாறி உதைத்து ஓய்ந்து போன ஐந்து குண்டர்களும் தமக்குள் ஏதோ இரகசியமாகப் பேசிக்கொண்டிருந்தனர்.

இடையிடையே 'கள்ளன் ....முஸ்கல்' போன்ற வார்த்தைகள் மட்டும் அவனது காதில் விழக்கூடிய வகையில் அவர்களிடமிருந்து பெரிதாக வந்துகொண்டிருந்தன.

கதிரனுக்கோ எதுவும் புரியவில்லை.
ஏன் அடிக்கிறார்கள்....? எதற்காகச் அடிக்கிறார்கள்?

நான் எந்தக் குற்றமும் செய்யவில்லையே....
எதுவுமே புரியவில்லை அவனுக்கு

நாட்டில் பரவலாக நடந்துகொண்டிருந்த சம்பவங்களில் காதுக்கெட்டியவைகள் அவனின் ஞாபகத்திற்கு வந்தன. தன்னையும் ஏதோ ஆபத்து நெருங்கிக் கொண்டிருக்கிறது என்பதை மட்டும்தான் அப்போதைக்கு அவனால் ஊகிக்க முடிந்தது.

அந்த பயங்கரமான சூழ்நிலையிலும் தனது ஏழ்மைக் குடும்பத்தைச் சுற்றியே கதிரனின் நினைவுகள் திரும்பிக் கொண்டிருந்தன.

www.tamilrangam.net



அடிகள், உதைகள் கொடுத்த வலியைவிட, தன் குடும்பம் அனாதரவாகிவிடுமே என்ற ஏக்கம் தான் அவனுக்கு கூடிய வலியைக் கொடுத்தது.

"அப்பா, வரேக்கை சொக்கா வாங்கிக்கொண்டுவாங்கோ" மழலைக்குரலுடன் ஓடி வந்து கதிரனின் காலைப்பிடிக்கும் அவனின் மூன்று வயசுக் குழந்தை.

மூன்று நாட்களாகியும் தன்னைக் காணாமல் எப்படித் தவித்தாளோ.....

அவனது முழு உடம்பும் ஒரு முறை குலுங்கியது.

"அப்பா நாளைக்குப் வெள்ளைச் சட்டை வாங்கித்தராட்டி நான் பள்ளிக்குப் போமாட்டன். வாத்தியார் அடிப்பார்". அழுது கொண்டே, கையைப்பிடித்த கதிரனின் மூத்தமகள். "எப்படியும் இண்டைக்கு வேலை முடிஞ்சு வரேக்கை கட்டாயம் வாங்கிக் கொண்டுதான் வருவன் அழாமல் பள்ளிக்குப் போ என்ன", வழமைபோல் தேற்றி விட்டு வேலைக்குச் சென்றவன்......

அதிகாலை விடிந்தும் விடியாததுமாய் மெல்லிய இருட்டு. நெஞ்சு நிறைந்த சுமைகளுடனும் பலவித கற்பனைக் கோலங்களுடனும் நடந்துகொண்டிருந்தான் கதிரன்.

'டேய் ... அதிலை போறவன் எங்களைக் கண்டிருப்பானோ...'

'சீ...நான் நினைக்கேல்லை. கண்டிருக்க ஞாயமில்லை'

கண்டிருந்தாலும் எங்களை யாரெண்டு அடையாளம் கண்டிருக்கேலாது.

கொள்ளையர் கூட்டம் தமக்குள் பேசிக் கொண்டே நகர்ந்தது.

பகலிலே சமூக விடிவுக்காக உழைப்பவர்கள் போலவும் இரவிலே சமூகத்திலிருந்து திருடி எடுக்கின்ற கொள்ளையர்களாகவும் ஆட்டம் போட்டுக் கொண்டிருந்தது அந்தக் கூட்டம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

நாதியற்ற சமூகமோ, தெரிந்தும் தெரியாதவர்களாய் புரிந்தும் புரியாதவர்களாய் தன்தலைக்குப் பிரச்சனை வரும்வரைக்கும் இது தனக்குத் தேவையற்றவிடயம் என்று ஒதுங்கியிருந்த காரணத்தால் இது போன்ற பல கூட்டங்கள் கேட்பாரற்று வளர்ந்து கொண்டிருந்தது.

இதயசுத்தியுடன் இவர்களது கூட்டத்துள் புகுந்தவர்களும் இவர்களுள் இல்லாமல் இல்லை. ஆனால், இவர்களின் கடுமையான உழைப்பும் தியாக உணர்வுகளும், கூட இத்தகைய வக்கிரப் பேர்வழிகளுக்குப் பக்கபலமாக அமைந்திருந்தது.

"எனக்கென்னவோ நல்லாய்ப்படேல்லை
அதிலை போனவன் கட்டாயம் எங்களைக் காட்டிருப்பான். நாங்கள் சனத்திட்டை மாட்டுப்படத்தான் போறம்."

"அதுக்கிப்ப என்ன செய்யச் சொல்லுறாய்"

"பேசாமல்...ஆளைக் கடத்திக் கொண்டுவந்து முடிச்சிட்டால்...."

"பிறகேன் யோசிப்பான் இன்டைக்கே அலுவலைக் கொடுக்க வேண்டியது தானே"

"பாவமடா அவனுக்குப்பிள்ளையளும் இருக்கெண்டு நினைக்கிறன்"

"உனக்குத் தெரிஞ்சவனே, பிறகென்ன பிரச்சனையுமில்லாமல் போச்சு. உந்தப் பழிவாவங்களையெல்லாம் பாத்தால் நாங்கள் சீவிக்கேலாது. நாங்கள் கொண்ட கொள்கை (?) க்காகச் சிலதுகள் அப்பிடி இப்பிடி நடக்கத்தான் செய்யும்". நியாயப்படுத்திக் கொண்டான் அந்த கூட்டத்தில் தலைவன் போலிருந்தவன்.

"கடத்தேக்கை ஊர்ச்சனம் ஏதாவது கேட்டால்....?

"அவ்வளவுக்கொண்டும் யோசிக்காதேயுங்கோ. முடிஞ்சவரையிலையாருக்கும் தெரியாமல் கடத்துவம். இல்லையெண்டால் 'இவர் ஊரிலை கன கொள்ளையள் சம்பந்தப்பட்டிருக்கிறார் விசாரிச்சுப்போட்டு விடுறம்' எண்டு ஒரு அடியைப்போடுறதுதானே. கூலிவேலை செய்யிறவன் தானே இவனைக் கடத்திறதை சனங்கள் அவ்வளவுக்குப் பெரிய விசயமாய் எடுக்காதுகள்."



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

'ஐயோ.. தம்பியவை என்னையொண்டும் செய்துபோடாதேங்கோ. என்ரை பிள்ளையள் அனாதையாய் போகிடுங்கள்; இரு கைகளையும் தலைக்கு மேலே உயர்த்தி கும்பிட்டு மன்றாடினான் கதிரன். பார்ப்பதற்குப் பரிதாபமான காட்சியாக இருந்தது.



ஒல்லியான உடம்பு. மெதுவாக கூனிய முதுகு. நாற்பது வயதையே அவன் அண்மித்திருந்த போதும், உழைப்பால்உறிஞ்சப்பட்ட அவனது தோற்றம் பார்வைக்கு அறுபது வயதைப்போல காட்சியளித்தது.

'அடேய்...குஸ்கல்.. எங்கை எங்கை எல்லாமடா கொள்ளையடிச்சனி. மரியாதையாய் உண்மையைச் சொல்லிப்போடு. சரியா, இல்லாட்டி".... பற்களை நெருடியவாறே கதிரனை மேலும் கீழுமாகப் பார்த்து முறைத்தான் ஒருவன்.

இடையிடையே புதிது புதிதாக வந்து கதிரனின் உடம்மைப் பதம்பார்த்தவர்களுக்கு அவன் ஒரு கொள்ளையனாகவே சித்தரிக்கப்பட்டுவிட்டான். பாவம் அவன் அவனால் எதுவுமே செய்யமுடியவில்லை.

"என்னங்கோ அரிசியும் முடிஞ்சுபோச்சு, பிள்ளையள் பசி தாங்காதுகள், வரேக்கை மறக்காமல் பசுபதி கடையிலே கடனாயென்டாலும் கொஞ்சம் அரிசிவாங்கிக் கொண்டு வாங்கோ" வீட்டைவிட்டுப் புறப்படும்போது அவனது மனைவி சொன்னது....

அன்றைக்கு உழைத்தால் தான் அன்றைய சீவியம் என்ற நிலையிலிருந்தது, கதிரனின் குடும்பம். இந்த மூன்று நாட்களும் தன் குடும்பம் என்ன பாடுபட்டிருக்குமோ....

நினைத்துப்பார்த்தபோது..... அழலை அடக்கிக் கொள்ளமுடியவில்லை அவனது இதயத்தில் எழுந்த வலி கண்ணீராக வெளிவந்தது. விக்கி விக்கி அழுதான்.

கூட்டத்திலுள் யாரோ ஒருவன் இரக்கசுபாவம் உள்ளவனாக இருந்திருக்க வேண்டும். கிளாஸ் ஒன்றில் தண்ணீர் கொண்டுவந்து கதிரனின் முன்னால் வைத்து விட்டு சென்றான்.

மதிய வேளையும் தாண்டிவிட்டது. தண்ணீர் அப்படியே இருந்தது. அந்த நேரத்தில் கதிரனுக்காக கண்ணீர் விட ஒருகிளாஸ் தண்ணீர் மட்டும் தயாராக இருந்தது.

தண்ணீர் வைத்தவனுக்குச் சந்தேகம் தொட்டுவிட்டது.
என்ன ..... இவன் அசையாமல் கிடக்கிறான்.

ஒரு வேளை.........

அருகில் சென்று மூக்கில் கைவைத்துப் பார்த்தான்.

மூச்சு நின்று போயிருந்தது.

கதிரன்.....

வாழ்க்கை முழுவதும் ஏழ்மையோடு போராடிக் களைத்துப்போன அவன் நிரந்தரமாக ஓய்வெடுத்துக் கொண்டான்.

மனிதத்தைத் தொலைத்த சிலரது கொள்(ளை)கை(?)க்காக அந்த அப்பாவி மன் தன் தன்னைப் பலிகொடுத்துவிட்டான்.

நாட்கள் நகர்ந்துவிட்டன...

தினமும் வாசலில் நின்று தெருவையே வெறித்துப் பார்த்தபடிக்கு கதிரனின் மனைவி

யாருமற்ற அனாதையாக....

உலகமறியாக் குழந்தைகளோ 'அப்பா எங்கையம்மா.... அப்பா எங்கையம்மா' எனச் சதா அவளது கரங்களைப் பற்றி இழுத்தவாறு.... ஒட்டிய வயிறும் சிந்திய கண்ணீருமாக........

www.tamilrangam.net

அவனிடத்தில் பதிலில்லை.

மௌனத்திலேயே உசுப்பிக் கொண்டிருந்த அவளது கேள்விகளுக்கு காலம் பதிலைக் கொடுத்தாக வேண்டும்

அவள் இன்னமும் காத்திருக்கிறாள்.

******

(உண்மைச் சம்பவமொன்றை மையக்கருவாகக் கொண்டு எழுதப்பட்டது)

## அசைவும் அலைவும்

என்னை அதிகம் கேட்காதீர்கள்!
வாழ்வு என்றால் என்ன?
அதில் வைக்கும் பற்றுஎன்ன?

சுழலும் உலகில்
தொங்கி நிற்கும்
உயிர்ப்பைத் தேடி
சிந்தனை விரிகிறது;
வயிறோ பசிக்கிறது!
தீனி எங்கே?
தீனி எங்கே?

வானம் முட்டம் போட்டிருக்கு!
எதிலும் ஊனம் தெரிகிறது;
உறுதியோ குலைகிறது.

இது என்ன?
வயிறு மீண்டும் பசிக்கிறது!
சிந்தனையோ பிழிகிறது!

பாடல் கேட்கிறது;
காது இரசிக்கப் பார்க்கிறது;
இதயமோ எங்கித் தவிக்கிறது;

உலகைப்பிழிந்து
வாழ்வைப் பரிசிட்ட
புத்தகம் மேசையில்
திறந்தபடி கிடக்கிறது!
மனம் எங்கே?
மனம் எங்கே?

நில்லா உலக ஓட்டத்தில்
ஒரு கணம் என்னை நிறுத்தி
அவள் கண்கள் பேசியது என்ன?

தேடலும் படைப்பும் அற்று
சமூகம் எதைநோக்கி
நடை போடுகிறது?
ஆடலும் பாடலும்
தொடர்பற்று இருக்கிறதே!

துன்புற்ற வேளை
உற்ற துணையாக
உதவும் நண்பன்
காலைவாரும்
நோக்கம் என்ன?

நான் மீண்டும்
உடுப்புப் போட்டு
செருப்பு மாட்டி
பள்ளிக்குச் செல்கிறேன்;
பிள்ளைகள் பார்த்திருக்கும்!

நத்தையும் ஆமையும் போல்
நாடும் வீடும் நம்வாழ்வும்
மெல்ல மெல்ல
உள்ளிழுத்தும்
உள்ளடங்கியும்
அசைகின்றன!
அலைகின்றன!

— [illegible] [illegible]

**நன்றி** "[illegible]"

www.tamilrangam.net

# "இயக்க இலக்கியமும் வர்க்க நிலைப்பாடும்".

— S. அகஸ்தியர்

('மெய்யானவை அனைத்தும் விவேகமானவை. விவேகமானவை அனைத்தும் மெய்யானவை, மெய்யும் விவேகமும் அற்றவை பொய்மையானவை' என்னும் இயல்புவாதத்திற்கூடாக வும் 'புரட்சிகரமான சித்தாந்தம் இல்லாமல், புரட்சிகரமான கலை இலக்கிய இயக்கம்இருக்கமுடியாது' என்னும் இயக்கவியற்தத்துவத்தினிற் கூடாகவும்— எஸ். ஏ )

## இரு இனத்துள் ஒரே வர்க்கக்குரும்சம்

கலை இலக்கியமாயினும் அரசியற் தத்துவசித்தாந்தமாயினும் இவை போன்ற எத்துறையாயினும் அவற்றினில் நாம் எவற்றை அறியவில்லையோ அவற்றையே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

மிகச் சரியாக ஆராயவேண்டியுள்ளது. எதனையும் தர்க்கவியலாகவன்றித் தன்னுணர்வு வாத நிலையில் அறிந்தவற்றைத் தன்னிச்சாபூர்வமாகப் பிரகடனப்படுத்திக் கொண்டிருப்பதானது அறிவின் சூனியத்திற்கு இட்டுச் செல்லும் 'பிரார்த்தனை'க் கொப்பான மாயை என்பதும் தவிர்க்கமுடியாதவொன்றாகிவிடுகின்றது. எனவே சமுதாயத்தைஅதன் இடையறுத இயக்க இணைவோடு முகிழ்தெழும் கலை இலக்கிய அரசியற்சித்தாந்த முனைப்பினைப் பரிவர்த்தனை செய்தல் கலைஇலக்கியவாதிகளுக்கு அவசியமாகின்றது.

நாம் காணும் எந்தவோர் நிகழ்வுகள்- சம்பவங்கள்- விளைவுகள் - ஒருபோதும் தானாக -'திடீர்திப்' பென்று தோன்றுவதில்லை என்னும் மெய்யிய லைக்க காண்கின், அவற்றிற்கு ஒவ்வோர் வரலாறுகளும் விஞ்ஞான அணுகுமுறைகளு முண்டு என்பதனை அறிந்துகொள்ளல் சாத்தியமே. ஒரு நிகழ்வின் சாரம்சத்தில் வெளிப்பாட்டு நிலைத் தோற்ற வடிவம் நடப்பியல்பாடு என்கின்ற அதன் தோற்றத்தின் மைய நிலைப்பாட்டினைச் சரியாகவுணர்த்தும் மெய்யியல் சார்ந்த விஞ்ஞான பூர்வ வரலாற்றுடன் புணராத சம்பவம் ஒரு பொய்மையான தோற்ற வடிவ நிலைப்பாடுக்கு இட்டுச் செல்லுமாகையால், அது, அங்கே இயக்கவியல்புவாத நெறிக்குப்பதிலாக இயக்கவியல் மறுப்புவாதக் கண்ணோட்டத்தைத் தழுவி நிற்பதையே பார்க்கமுடிகின்றது

சரித்திரத்தைப் புறக்கணிக்கின்ற விஞ்ஞானமோ, விஞ்ஞானத்தைப் புறக்கணிக்கின்ற சரித்திரமோ ஒருபோதும் உண்மை நிகழ்வு ஆகாது' என்று ஓர் மெய்ஞ்ஞானம் எப்போதும் உணர்த்தி நிற்கிறதல்லவா? கலை இலக்கியம் அரசியல் ஆகிய எத்துறை சார்ந்திருப்பினும் வாழ்க்கையை அந்த மெய்ஞ்ஞானத்தினூடாக அணுகினால் மட்டுமே யதார்த்த நிலைப்பாட்டை எய்தமுடியும். இந்த அணுகுமுறை தவிர்ந்த பார்வையோ கணிப்புமுறையோ தவறான தன்னழிவுவாத வழிக்கே இட்டுச்செல்லும்.

உதாரணத்திற்கு இலங்கையின் 1983 ஜூலைக் கலவரத்தை எடுத்துக் கொள்வோம். அந்தக் கலவரத்திற்குக் காரணமாகப் பதின்மூன்று ராணுவத்தினர் அழிப்பினை ஓயாமல் கூறப்படினும், அந்த அழிப்புச் சம்பவம் ஏதோ 'திடீர் திப்' பென்று நிகழவில்லை. அதற்கு ஒரு வரலாறுண்டு. ஒரு விஞ்ஞானபூர்வ அணுகுமுறை உண்டு. அதன் காரண காரியங்களுக்கு வரலாறும் விஞ்ஞான வளமும் இணைந்திருந்ததைப் பார்க்க முடிகின்றது. 83 ஜூலைக் கலவர நிகழ்வும் அதுபோன்றதேஅந்த நிகழ்வுக்கோ அதன் காரணகாரியத்திற்கோ வரலாறுடிணைந்த விஞ்ஞான அணுகுமு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

முறை செயற்பட்ட விதம் தாளுசிய நிலைபேறல்லவென்பதைக் காணவும் முடிகின்றது.

இதுபோன்றே எந்த விவகாரத்திலும் எப்போதும் தொடராக நிலைபேறுகள் உலகனைத்தும் நிகழ்வுத் தொடராகவிருக்கும்போது, இவற்றையெல்லாம் தவிர்த்தோ நிராகரித்துக்கொண்டோ சுயவாத நிகழ்வுபூர்வமான கலை இலக்கியப் படைப்புகளை எந்தவொர் இலக்கியவாதியாவது செப்பமாக சரியாக அளித்துவிடமுடியாது.

இவ்வித மெய்யியல் நெறியினூடாக இலங்கையில் நிகழ்ந்த-நிகழ்கின்ற சம்பவங்களை நுனிசி ஆயும்போது கலை இலக்கிய அரசியல் வரலாறுகள் எப்படியெல்-லாம் பொய்மைத் தோற்றம் பெறப்பட்டனவென்பதும், அதன்பேறுக எத்தகைய விளைவுகள் கலை இலக்கிய அரசியற் களங்கள்தோறும் இயக்கவியல் மறுப்பு வாதத்திற்கு நாட்டை இட்டுச் சென்றன- செல்கின்றனவென்பதும் நிதரிசனப்படுகின்றன.

முன்னர் ஒரு விமர்சனக்கட்டுரையில் 'கலை இலக்கிய அரசியற் களத்துள்ளும் அவை சார்ந்த இனங்களுக்குள்ளும் நிலவுகின்ற 'வர்க்க முரண்பாடு' பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிட்டிருந்தேன். அதனை இங்கு சற்று விரிவாக்கம் செய்தல்பொருத்தமாகுமெனக் கருதுகிறேன்.

ஆதிப் பொதுவுடமைச் சமுதாய அமைப்புத் தோன்றியபோதே மனித குலத்துள் 'வர்க்கமுரண்பாட்டுணர்வு'ச் செயற்பாடு தலையெடுத்து அது தொடராக இயக்க வடிவம் பெற்றுவருவதை அனைவரும் அறிவோம். இதனை வரலாற்றினூடாகப் பார்க்கையில் எப்போதும் ஓர் இனத்துள் இரண்டு முரண்பட்ட வர்க்கக்குழுமங்களைக் கொண்ட 'வர்க்கப்பிரிவு' மக்களையே காண்கின்றோம். ஒரு தேசிய இனம் ஒரே இனமாகத்திகழ்வது எவ்வாறு மெய்மையானதோ, அவ்வாறே ஒரேஇனத்துள்ளும் இரண்டு வர்க்கம் சார்ந்த- முதலாளித்துவ- தொழிலாள பாட்டாளித்துவ எதிர் முரண்பாடு கொண்ட 'இரண்டு வர்க்கம்' இருப்பதும் மெய்மையானதே. இம் முரண்பாட்டுள்ளும் நேசமுரண்பாடு, உள்முரண்பாடு, விரோத முரண்பாடு ஆகிய மூன்று குழும்சங்கள் வியாபித்திருப்பதனையும் காண்கின்றோம். இயக்க மூலத்துள் ஏற்படும் நேசமுரண்பாடு, உள்முரண்பாடு ஆகிய இரண்டு முரண்பாடுகள் தீர்க்கக் கூடியவை. விரோத முரண்பாடு- அதாவது தொழிலாள வர்க்க முதலாளித்துவ வர்க்க முரண்பாடு தீர்க்கமுடியாத ஒன்றாகும். முரண்பாட்டைத் தோற்றுவித்த முதலாளித்துவ வர்க்கம் தகர்க்கப்படும்வரை அது தீர்க்கப்படாமலே இருக்கும். இவ்வியல்புவாதத்தினூடாகவே மெய்மைத் தோற்றத்தைத் தரிசிக்கமுடியும்.

www.tamilrangam.net

இவ்வாறமைந்த வர்க்கங்களுக்குள்ளாகவே இலங்கையின் இரண்டு இனத்துள் ஒரே வர்க்க குணம்சமுள்ள - அதாவது முதலாளித்துவ வர்க்க குணம்சமுள்ள சக்திகளுக்குள் ஒப்பந்தங்கள் செய்யவும், அவற்றின் அரசபீடங்களில் இணைந்து அமரவும் முடிந்தது. முதலாளித்துவ வர்க்க சக்திகளை நிராகரித்துக் கொண்டு ஜனநாயகபூர்வமாக 1956ல் முகிழ்த்த தேசிய பூர்ஷுவாக்களின் சில முனைப்புகள் தவிர்க்க வொண்ணுச் சில்லெடுப்புகளாகத் தோன்றியபோதும், அவை நிவர்த்தி பண்ணக் கூடியதாகவிருந்த பக்குவ நிலையில் அவற்றைத் தம் வர்க்கத்திற்குச் சாதகமாகப் பயன்படுத்தக்கூடிய ஒப்பந்தங்களும் இரண்டு இனத்துள் ஒரே வர்க்க நிலைப்பாட்டாளர்களால் செய்யப்பட்டன. அவ்வாறுன ஒப்பந்தங்கள் மீறப்பட்ட சம்பவங்களும் இரண்டு இனத்துள் தலைமைத்துவம் தாங்கிய முதலாளித்துவ வர்க்கங்களுக்குள்ளேயே நிகழ்ந்தன. ஒப்பந்தங்கள் செய்யப்பட்டதும், மீறப்பட்டதும் தமக்குள் இணக்கங் கண்டு அரச அதிகாரபீடம் அமர்ந்தும், இந்த இரண்டு இனத்துள் முகிழ்த்த முதலாளித்துவ-வர்க்கச்சார்புத் தலைமைகளே. தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையைமட்டுமன்றி நியாயமான உரிமைகளைக்கூட நாடுபூராவும் எதிர்த்துக் கண்டியாத்திரை செய்ததும் முதலாளித்துவ வர்க்கமே. இனக்கலவரங்களை நடத்தியதும் இந்த இரண்டு இனத்துள் இணைந்த முதலாளித்துவ வர்க்கத் தலைமையே தவிர, தொழிலாள வர்க்க சக்திகளல்ல.

வரலாற்றுண்மை இப்படியிருக்க, இவற்றிற்கு முற்றிலும் மாருக ஒருபொய்மைத் தோற்றத்தையே இந்த இரு இன முதலாளித்துவ சக்திகள் வெளியே காண்பித்தன.

உற்பத்திச் சக்திகள், உற்பத்தி உறவுகள், உற்பத்திச் சாதனங்கள் ஆகியவற்றில் ஏகபோக உரிமை கொண்ட முதலாளித்துவ வர்க்க சக்திகள் நாட்டின் - பொருளாதார நெருக்கடிக்கும் சீரழிவிற்கும் முகங்கொடுக்க முற்றுகவே தகுதியற்று வக்கற்றுப்போனதால் தங்கள் வழக்கமான வர்க்க குணம்சங் கொண்ட இனவாதம், மதவாதம், பிரிவினைவாதம், பேரினவாதம், சிற்றினவாதம் என்னும் ஆயுதங்களை வாருகப் பயன்படுத்தியதோடு இவ்விளைவுகளால் இந்த முதலாளித்துவ வர்க்கச் சக்திகள் தம்மைப் பலப்படுத்திக் கொண்ட வாய்ப்புகள் வரலாற்றில் மறைக்கப்பட்டமை ஒன்றும் தற்செயலாக நிகழ்பவையன்று. 'சிங்கள இனம் தமிழ் இனத்தின் -- விரோதி' என்றும் 'தமிழ் இனம் சிங்கள இனத்தின் விரோதி' என்றும் இரு இனத்துள்ளும் எழுப்பப்பட்ட ஓயாத சுலோகம் எந்த வர்க்கச் சார்பாகத் கோஷிக்கப்பட்டது என்பதும், அது இன்றுவரை வரலாற்றிலிருந்து மறைக்கப்பட்டதும் தற்செயலான காரியம் அல்ல.

www.tamilrangam.net

இரு இனத்துள் ஒரே வர்க்கச் சார்புவாதம் இருப்பதுபோல் ஒரேஇனத்துள்ளும் இரு முரண்வர்க்கச் சார்புவாத இயல்பினை இந்த மெய்மையோடு காணும் போதுதான் இரு இனத்துள்ளும் உள்ள முதலாளித்துவ வர்க்கம் இரு கன்னையான பொய்மையைக் காட்டி ஒரே வர்க்க இயக்க முறைகளை வெவ்வேறு ரூபங்களில்கட்டவிழ்த்துவிடுகின்றது என்பதனையும் இனங்காணமுடியும். இவ்வுண்மை வரலாற்றினை முற்றாகத் திரித்து ஒரு பொய்மைத் தோற்றத்தை அளிப்பதில் முதலாளித்துவ வர்க்கசக்திகள் வெற்றிகண்டமையால்தான் 1956லிருந்து கட்டம் கட்டமாகத் தகர்ந்துபோ-கக்கூடிய இவ்வர்க்க சக்திகள் முன்னைய விடப்பன் மடங்கு பலம் பொருந்திய துடன் பிரச்சினைகளைச் சுமுகமாகத் தீர்த்து வைக்கக்கூடிய சந்தர்ப்பங்களையும் மிகச்சிக்கலாக்கி வைத்து தமது கைக்குள் அதிகாரத்தைத் தொடர்ந்து வைத்திருக்கமுடிகிறது ஐந்து வருச ஆட்சிக்காக ஜனநாயகம் பேசிய முதலாளித்துவம் பன்னிரண்டு ஆண்டுக-ளாக ஒரு தலைமையிலும், பிறிதொருகால் அதேவர்க்க சக்திகளின் இன்னொர் தலைமையிலும் அதிகாரம் செய்யவும் முடிகின்றது.

இனப்பிரச்சனைமட்டுமல்ல, எந்தப் பிரச்சனையுமே முற்று முழுதாகத் தவிர்க்கமுடியாதபடி ஒரு பொருளாதாரப் பிரச்சனை என்பதும், முதலாளித்துவச் சுரண்டல் அமைப்புக்குள் ஒருபோதும் இனப்பிரச்சனையைத் தீர்க்கமுடியாததென்றஉண்மையினை மறைத்து 'இனப்பிரச்சனை' என்ற தோற்றத்தைப் பூதாகாரமாகக்காண்பிப்பதும் முதலாளித்துவத்தின் முக்கிய குறும்சங்களாகும். இக்குறும்சம் ஓர் இனத்துள் மாத்திரமன்றி இரு இனங்களுள்ளும் பல்வேறு வடிவச் செயற்பாடுகளால் உள்ளடக்கிய ஒரு பொய்மைத் தோற்றம் மெய்மைப்படுத்தப்பட்டு உண்மை வரலாற்றை மறைப்பதுமாத்திரமன்றி சமுதாயவாழ்வையும் பின்னுக்குத் தள்ளிவிடுகின்றது. ஆயினும், இயக்கவியல்பான வரலாறு ஒருபோதும் பின்னடைவதில்லை. முன் செல்லும் அதன் பரிணாம ஊற்றுக்கண் திறபட முதலாளித்துவ வர்க்கத்தின் அத்திவாரமற்ற பொய்மைத்தோற்றம் தகர்ந்து போவது தவிர்க்கப்பட முடியாத ஒரு வரலாற்று நிகழ்வாக அமையும்.

## கலை இலக்கியமும் சார்பு வாதமும்.

இவ்வாறே கலை இலக்கியக் களத்திலும் தன்னிச்சையான சுயவாதப்போக்கும் தன்னுணர்புவாதக் கோட்பாடும் இயக்க மறுப்பியல்வாதத்துள் சிக்குண்டிருப்பதானது ஒன்றும் தற்செயலான காரியமல்ல. அரிசி இல்லாமல் சோறு சமைக்கும்தோரணையில் 'அரசியல் வேறு இலக்கியம் வேறு' என்று அரசியல் கலவாத இலக்கியம் சமுதாயப் பிரக்ஞையற்ற இலக்கியம், அரசியலை நிராகரிக்கிற இலக்கியம் என்னும் சுயம்புவான இலக்கியம் படைக்கும் மேதைகளை இலக்கிய உலகம் ஒரு போதும் கண்டதில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

தமிழ் இலக்கியக் களத்தில் வக்கரித்துப்போன சில கலை இலக்கியக்காறர்களாலும் தன்னுணர்வுவாத விமர்சகர்களாலும் செல்லரித்துப்போன குரல் மீண்டும் தலையெடுத்திருக்கிறது. மேலாண்மை வர்க்க அதிகார சக்திகளின் பலம் அரசமட்டத்தில் ஆளுமைசெய்யும்போது இத்தகைய சுயவாத இலக்கியக்காறர்களின் தன்னுணர்வுவாதம் தலையெடுப்பதும் இயல்பே. 1977க்குப்பின் இலங்கையில் கலை இலக்கியக் களம் சரியான இயல்புவாத இலக்கிய விமர்சனத்திற்குப் பெரும்பாலாக உட்படாதிருப்பதன் காரணமாகவே இது தலையெடுத்திருக்கிறது.

இந்த இலக்கியக்காறர்கள் என்ன கூறுகிறார்கள், எதனைக் கூறமுன் வருகிறார்கள் என்பதையும், அவற்றின் கருதுகோள்களையும் இலக்கிய வாசகர்களும் தெரியவேண்டுமென்பதால் இங்கே அவைபற்றிச் சுட்டப்படுகின்றது. தமக்கு இலக்கியக் கருத்து' எதுவும் இல்லையாம். தாங்கள் எந்த அணி சார்ந்தும் இலக்கியம் படைப்பதில்லையாம். அரிசி இல்லாமலே சோறு சமைக்கும் சமார்த்தியம் தங்களுக்கு உண்டாம். அதாவது தாங்கள் எந்த அணிசார்ந்தும் இலக்கியம் படைப்பதில்லையாம்.

'அணி' 'இயக்கம்', 'கட்சி', 'அரசியல்', 'இலாபம்', 'முற்போக்கு, 'பிற்போக்கு', 'தத்துவம்', 'சித்தாந்தம்', 'கோட்பாடு', என்றெல்லாம்வரிந்துகட்டிக் கொண்டு ஒரு 'வட்டத்'துக்குள் நின்று குறுகிய மனப்பான்மையோடு எழுதாமல், தாங்கள் 'பரந்த' 'விசாலமான' 'சுயசிந்தனை'யோடு எந்தத் தாக்கத்திற்குமுட்படாமல் எழுதுகின்ற 'சுதந்திரப்' பிறவிகளாம். அதாவது, சுயவாதஜனநாயகப் பண்பாளர்களாம்.

சொல் அலங்காரம் அழகாகத்தான் இருக்கிறது. விவகாரம் சிக்கல் நிறைந்த —ஆனால், வேப்பங்காயாகவிருப்பினும் கேட்பதற்கு இனிமையாகத்தான் இருக்கிறது. 'ஆகா, இப்படியெல்லாம் சொல்கின்ற எழுத்தாளனல்லவோ மனுசன். இவனல்லவோ உண்மையான இலக்கியக்காறன்' என்றும் எண்ணத்தோன்றுகின்றது.

சும்மா கண்ணை மூடிக்கொண்டு இப்படியெல்லாம் கிளிப்பிள்ளைபோல்எழுந்தமானமாகச் சொல்ல இன்றைய மேலாண்மை சார்ந்த சமூக அமைப்பதிகார வர்க்கம் இத்தகைய கிளிப்பிள்ளைகளுக்கு ஓர் அருமையான வாய்ப்பாகவும் பெரும் வரப்பிரசாதமாகவும் அமைந்திருக்கிறதும் உண்மைதான். ஆனால், இந்த இனிமையான சொற்தொனி அமுதசுரபியா, ஆலகாலவிசமா என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டிய சுதந்திரம் எழுத்தாளனுக்கு உண்டு., இலக்கிய வாசகனுக்கும் உண்டு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

முனைவிட்டுப்போன ஒவ்வோர் மனிதனின் வாழ்க்கையே போர்க்களமாக மாறிவிட்ட எரிநெருப்பில் , தூய இடைபாதை தேடும் இந்தச் சுதந்திர ஜனநாயக இலக்கியப்பிறவிகள் யார்? சமுதாய இழையோடிய வாழ்க்கைப் பிரக்ஞையிழந்து, எந்தக்கருதுகோளுமின்றித் தான்தோன்றித் தனமாகச் சுயவழி நடந்து செல்லுகின்ற இந்தச் சுதந்திரப்பிரம்மாக்கள் யார்?

நாற்பது ஆண்டுகளுக்குமேலாகப் பேனா தூக்கிய காலந்தொட்டு இலக்கிய உலகில் சஞ்சரித்துக் கொண்டிருக்கும் என்னால் இப்படி ஓர் எழுத்தாளனையோ அப்படிப்பட்டவனின் இலக்கியப் படைப்புக்களையோ ஒருபோதும் சந்திக்கமுடிந்ததில்லை. ஏதோ ஒரு கன்னை சார்ந்து சார்ந்த கன்னைக்கேற்ப சுதந்திரமாகக் கருத்துச் சொன்ன எழுத்தாளனைத்தான் எப்போதும் சந்தித்திருக்கிறேன்.

'அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு' என்ற வள்ளுவப் பெருந்தகையிலிருந்து ஆறுமுகநாவலர் ஈறாக, மகான் டால்ஸ்டாய் மகாகவி பாரதி உட்பட, மார்க்ஸிம் கார்க்கி தொட்டு மாப்பசானுக்குப் பிறகும், இன்றைய அனைத்து இலக்கியவாதிகளுமே ஏதோ ஒரு கன்னை சார்ந்து தத்தம் கருதுகோள்களைச் தரிசித்திருக்கிறேனே தவிர, எந்தக் கன்னையும் சாராமல் எதனதும் பாதிப்புக்குள்ளாகாமல் சகல பிரச்சனைகளையும் நிராகரித்துவிட்டச் சுதந்திரமாக எழுதுகின்ற எழுத்தாளனைச் சந்தித்ததே கிடையாது.

இங்கே ஏதோ ஒரு கன்னை சார்த்து சுதந்திரமாக என்றும்' சகலபிரச்சனைகளையும் நிராகரித்துவிட்டு' என்றும் அழுத்திய பதப் பிரயோகங்களின் தொனிப் பொருளை நுணுக்கமாக ஆராய்ந்து கவனித்தால் சகல எழுத்தாளர்களினதும் நிலைப்பாட்டின் தாற்பரியத்தைப் புரிந்துகொள்வதில் சிக்கலே இருக்காது.

'கலை கலைக்காக' 'இலக்கியம் இலக்கியத்திற்காக', 'கலை இலக்கியம் பொழுதுபோக்கிற்காக' என்றெல்லாம் முன்பு மல்லுக்கட்டி வக்காலத்துவாங்கிய இலக்கியக்காறர்கள் எந்த வர்க்கத்திற்குச் சேவகம் செய்தார்கள் என்பதையும் அத்தகையோர் ஈற்றில் எந்த வர்க்கச் சார்புவாத அதிகாரத்திற்கு இரையானார்கள் என்பதையும் நாம் அறிவோம். அத்தகைய இலக்கியக்காறர்களின் கருத்துருவங்கள் அவர்களையறியாமல் முழுமையாகவே வர்க்கச் சார்புவாத இலக்கியங்களாகவிருந்தபோதும், அவர்களின் இலக்கிய உருவங்கள் மிகச் சிறப்பான கலாரூப அம்சங்களாகத் திகழ்வதையும் நாம் அறிவோம். ஆனைப்பட்ட அந்த இலக்கியக்காறர்களே 'கலையும் இலக்கியமும் மக்களுக்காகவே' என்று வந்துவிட்டார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

ஆனால், இந்த இலக்கியக்காறர்களோ இரண்டுங்கெட்டான் நிலையிலிருந்துகொண்டே இப்படியெல்லாம் பொறுப்பில்லாமல் 'சும்மா' கதையளக்கிறார்கள். சீழ் பிடித்த தமிழ்ச் சினிமாக்காறர்களின் பாணியில் இவர்கள் 'கதை பண்ணுகின்ற' காதலும் கத்தரிக்காயும் என்ற 'குடும்பவிநோதக் கதைகள்' கூட ஏதோ ஒரு வர்க்கம் சார்ந்து இருப்பதை இவர்கள் அறிவதில்லை., அறிய முற்படுவதில்லை இந்த இவர்களுக்குக் கதை எழுதவும், விமர்சனம் செய்யவும், கலை இலக்கியத்தின் பேரால் ஸ்தாபனம் அமைக்கவும் 'ஆசை' வேறு வருகிறது. இந்த ஆசை வரட்டும், அது சரியாக வளரட்டும்.

எந்த வர்க்கச் சார்புமின்றியே சுத்த சுயம்புவான இலக்கியம் படைக்கும் இந்தப் பிரமாக்கள் தங்கள் எழுதுகோல் எந்த வர்க்கத்திற்குச் சேவை செய்கிறது என்பதைக் கூடச் சிறிதும் புரியாமல் தங்களைத் தாங்களே ஏமாற்றித் தங்களையே வஞ்சித்துக்கொள்வதைப்பற்றி நமக்கொன்றும் ஆட்சேபனை இல்லை. ஆனால், வாசகர்களையும் பொதுமக்களையும் இப்படியெல்லாம் கண்மூடித்தனமாக, இவர்கள் ஏமாற்றுவதையும் வஞ்சிப்பதையும் நான் ஏற்றுக் கொள்ளமுடியவில்லை.

ஒரு சிலர் செல்வத்தில் மிதக்கிறார்கள், மிகப் பலரான நாமோ வறுமையில் வாடுகின்றோம்' என்று தொழிலாளர்களும் சாதாரண ஏழை மக்களும் எப்போதும் ஓர் 'உண்மை'யைக் கூறுகின்றார்கள். ஆனால், இந்த வறுமையிலிருந்துமீளவும் ஏற்றத் தாழ்வற்ற சமத்துவமான வாழ்வை நாடவும் இவர்கள் கூறும் மார்க்கங்களில்தான் எப்போதும் 'பொய்யர்'களாக இருக்கிறார்கள். இதன்கண் இவர்கள் தங்களைத் தாங்களே வஞ்சித்துக் கொள்வதுடன் தங்களையும் வீணாக அழித்து, முன்னேறும் சமுதாயத்தையும் தடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால்தான் அவர்கள்ஏக காலத்தில் கூறும் அந்த உண்மையும் இந்தப் பொய்யும் நீடித்துக் கொண்டிருக்கின்றன இந்த இவர்களை நம்பியே சுரண்டும் அதிகாரவர்க்கம் உயிருடன் வாழ்ந்து கொண்டிருக்கிறது' என்னும் ஓர் இயக்கவியல் மெய்ஞ்ஞானம் பறைசாற்றுகின்றது.

இந்த இயக்கவியல் பற்றிய மெய்ஞ்ஞானம் என்பது என்ன?

'மோட்சபரகதியடையலாம்' என்ற நம்பிக்கையில் தலாய்லாமா சுகமாகக் கழிக்கிற அசிங்கத்தை வலுவில்லவ்கப்பட்டு நக்கிய பௌத்த சிகாமணிகளையும் 'துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள், அவர்களுக்கே மோட்ச ராஜ்ஜியவாசல் திறந்துவிடப்பட்டிருக்கிறது' என்கிற பைபிளையும், 'அநித்தியமான இந்த மாய மாயா உலகில் அடையும்' இன்பமும் அநித்தியமாகையால், துன்பங்களையும் இன்பமாகக் கருதி இறையடி சேர்வோமாக' என்ற மதாச்சாரிகளையும் கொண்ட கருத்துமுதல்வாதிகளின் 'கற்பனை உலகத்தை' முற்று முழுதாக விஞ்ஞானபூர்வமாக நிராகின்ற பொருள் முதல் வாதமே அந்த மெய்ஞ்ஞானம்.

www.tamilrangam.net

'கற்பனு வாதம்! 'பொருள்முதல்வாதம்' என்கின்ற இரண்டு நேர் எதிர் முரண்பாடுள்ள உலகம் இங்கே நமக்குத் தெரிகிறதல்லவா? இப்பொழுது இரண்டு எதிர் முரண்பாடுள்ள உலகக் கண்ணோட்டக் கலை இலக்கியம் சார்ந்த எழுத்தாளர்களை இதனூடகப் பிரத்தியட்சமாகப் பார்க்கவும் முடிகிறதல்லவா? அதாவது கற்பனையால் பொருள் அல்லது வாழ்க்கை தோன்றுவதில்லை என்பதும் பொருள் அல்லது வாழ்க்கையிலிருந்தே கற்பனை அல்லது சிந்தனை உதிக்கின்றது என்பதும் பட்டவர்த்தனமாகத் தெரிகிறதல்லவா? எனவேதான் நாம் 'வர்க்கம் சாராத, சுத்த சுயம்புவான, வாழ்க்கையை நிராகரித்த கலை இலக்கியக்காறர் எவருமே கிடையாது என்றும், இவற்றைத் தவிர்ந்த கற்பனுவாத இலக்கியங்கள் வாழ்க்கைக்கொவ்வா - தவை' என்றும் அடித்துச் சொல்லுகின்ருேம்.

'மாடு சுதந்திரமாகத்தான் நடக்கிறது. ஆனுல், அது 'எங்கே செல்கிறேன்' என்ற ஒரு குறிக்கோளுடன்தான் செல்கிறது. அது 'சும்மா' ஏனுேதானுே என்று நடப்பதில்லை. மிருகங்களினதும், பறவைகளினதும் சகல கிருத்தியங்களும்குறிக்கோளுடன் நோக்கத்துடன்தான் நிகழ்கின்றன. மிருக வைத்திய நிபுணர்களின் விஞ்ஞானபூர்வ ஆய்வுகளிலிருந்தும் இவற்றைத் தெரிந்துகொள்ளலாம். வாய்விடாச் சாதிகளான மிருகங்களுக்கே குறிக்கோள் இருக்கும்போது வாய்வீச்சுச் சாதிகளான எழுத்தாளர்களுக்கு 'எந்தவிதமான குறிக்கோளோ நோக்கமோ கருத்தோ இல்லை' என்று கூறின் அது சுத்தமான பொய். அசிங்கமான வஞ்சகம்.

ஒரு குறிக்கோள் அல்லது நோக்கம் கருத்துருவமாக ஏன் உண்டாகின்றது வீடுகள் தோறும் சாக்கடைச் சச்சரவுகள் உண்டே இச்சச்சரவுகள் ஏன் ஏற்படுகின்றன?

அங்கே ஒரு கருத்துமுரண்பாடு' தோன்றுவதாலேயே 'இருகன்னைவாதம் கருவுகோளாகிச் சச்சரவு -சண்டை உண்டாகின்றது.

இரு கன்னையான சச்சரவுகளை- சண்டைகளை -மல்லுக்களைத் தோற்றுவித்த 'முரண்பாடு'கள் எங்கிருந்து முளைத்தன? ஏன் இந்த முரண்பாடுகள் தோன்றுகின்றன? இந்த முரண்பாடுகள் 'தீடீரிப்'பென்று தாஞகவா தோன்றுகின்ற- னவா? இல்லை, இவை ஒருபோதும் தாமாகத் தோன்றுவதில்லை. இவற்றிற்கு ஒரு விஞ்ஞானபூர்வ வரலாறுண்டு.

உலகப் பார்வை பற்றியோ, சமூக வாழ்வைப் பற்றியோ சிந்திக்காதவன் எந்தவிதமான பொறுப்பில்லாமல் இவற்றையெல்லாம் 'அவனவன் தலைவிதி' என்று மதவாதிபோல் கண்ணை மூடிக்கொண்டு வெகு சுலபமாகச் சொல்லி நயவஞ்சமாகவும் தப்பித்துக்கொள்ளலாம். அவனுல் அப்படித் தப்பித்துக்கொள்ளவும் முடியும்.

www.tamilrangam.net

ஆனால், ஒரு சமூக விஞ்ஞானியான எழுத்தாளனால் அப்படித் தப்பித்துக் கொள்ளமுடியாது. அவன் அப்படித் தப்பித்துக்கொள்ளவும் மாட்டான்.

விவகாரங்கள் இப்படியெல்லாம் சங்கிலித் தொடராக இருக்கும் போது இந்த வாழ்க்கைக் கொப்பறையை நிராகரித்துவிட்டு, மக்கள் வாழ்க்கைப் பிரச்சனையிலிருந்து விலகியிருந்து எந்தவிதமான நோக்கமோ குறிக்கோளோகருத்தியலோ இல்லாமல் சுயவாதமாக எழுதுகின்ற இந்த ஜாம்பவான்கள் தங்கள் இலக்கியங்களில் எதனைக் கூறவருகிறார்கள்? அல்லது எதனையுமே கூறாமல் விட்டுவிடுகிறார்களா?

இதனைத்தான் அவர்கள் ஒருபோதும் சொல்வதில்லை. இதனை அவர்களால் சொல்லமுடிவதில்லை. இதனை இவர்கள் சொன்னால் தாங்கள் எந்தஅணிசார்ந்திருக்கிறோம் என்று இவர்களே சொல்ல நேரிடும். இதன் உண்மையான அர்த்தம்என்னவெனில், இவர்கள் ஏதோ ஓர் அணி சார்ந்து வரிந்துகட்டிக் கட்சி கூடிக் கொண்டேதங்களை 'இன்னார்' என்று இனங்காட்டிக் கொள்ளாமல் பச்சோந்திப்பால் தப்பித்துக்கொள்ள நினைப்பதுதான். இதன் அந்தரங்க நோக்கம் ஒன்றும் அறியமுடியாததுமல்ல.

'அடிக்கிற உடுக்கை உனது கன்னைக்கு அடிக்காதே, எனது கன்னைக்கு அடி' என்று தாங்கள் கட்சி கட்டி நிற்பதையும் இந்த 'நற்போக்கு' வாதிகள் வெளிப்படையாகச் சொல்வதும் கிடையாது. அதனால்தான் மானிட நேயத்தோடுசமுதாயப் பிரக்ஞைபூர்வமான பொறுப்போடு எழுதுகின்ற எழுத்தாளன் இவர்களின் நோக்கங்களை இவர்களுக்கே வெளிச்சமாக்கி அறிவுறுத்த வேண்டியிருக்கிறது.

இலக்கியக் களத்தில் இத்தகைய ஒழுக்கக்கேடு இன்னும் தொடர்வதன்சூட்சுமத்தை இவர்கள் அறியாவிட்டாலும் அல்லது மறைத்துக்கொண்டாலும் நாம் துலாம்பரமாக அறிவோம். கன்னை சேர்ந்து கட்சி கட்டி ஓர் அணி சார்ந்து நின்ற வள்ளுவன், பாரதி, புதுமைப்பித்தன் மாட்சிமைகூட இவர்களுக்குத் தெரிவதில்லை.. இதில் வேடிக்கை என்னவென்றால், தங்கள் தன்னுணர்வான சுயவாத இலக்கியங்களுக்கு இதே வள்ளுவனையும், பாரதியையும், புதுமைப்பித்தனையும், கார்க்கியையும், தாகூரையும், இவர்கள் துணைசேர்க்க இழுத்துக்கொள்வதுதான்.

•••

குறிப்பு- இதில் 'கட்சி கட்டி வர்க்கம் சார்ந்து எழுதுகின்ற முனைப்புகளைப் பற்றிக் கூறப்படுகிறதேயன்றி, அவ்வாறுள்ள சார்பு இலக்கியக் கோட்பாடுகள் பற்றிய ஆய்வோ, சரி பிழையோ விமர்சிக்கப்படவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net



# "விசர் தாமோதரி"

— ஆதித்தன்

என்ன! இவன் தாமோதரியன் கத்திக்கொண்டுநிற்கிறான் விசர் முத்திப் போச்சுதுபோலை, அதுதானே பாக்கிறியள்.

ஓமோம் நான் ஏதாவது கதைக்க வெளிக்கிட்டால் எனக்கு விசர் பட்டம் கட்டுவியள் என்பது நல்லாய்த் தெரியும். இருந்தாலும் சில விசயங்களைக் கதைக்காமலிருக்க என்னாலை முடியேல்லை பாருங்கோ.

இண்டைக்குப் பரிசில எங்கடை ஆக்கள்-போற போக்கைப் பார்த்தால்எனக்கென்னவோ நல்லாய்ப்படேல்லை. எல்லாவிதத்தாலும் சீரழிவாய்த்தான் கிடக்கு.

இதுகளைத் தட்டி நிமிர்த்திறதுக்கும் ஒருதரும் முன்னுக்கும் வருகினமில்லை. சிலர் புத்தகங்களிலை வடிவாய் எழுதிப்போட்டு பின்கதவாலை செய்யிற வேலையளைப் பாத்தால் .....; ஐயோ.... மண்டை வெடிக்குது.

இப்ப வீட்டுக்கு வீடு வியாபாரச் சங்கங்களாயும் போச்சு. அட போனால்போகுது எண்டு பாத்தால் ஆட்டைக்கடிச்சு மாட்டை கடிச்சு, கடைசியில பிள்ளையை வைச்சு யாவாரம் பண்ணவும் வெளிக்கிட்டாச்சு.

கலையும் ஒரு யாவாரப் பொருள் எண்ட நினைப்புப்போலை. ஒரு சமூகத்தின்ரை உயிர்நாடி கலை எண்டது கனபேருக்குவிளங்கேலை. கலை சமூகத்தின்ரை வளர்ச்சிக்கு பயன்படவேணுமே தவிர வெறும் பொழுதுபோக்கு யாவாரமாகிவிடப்பிடாது பாருங்கோ.

என்ன இவன் தாமோதரியன் மற்றவர்காசு உழைக்கிறான் எண்ட பொறாமையிலை கிடந்து கத்துறான் எண்டு நினைக்கிறியள் போலைகிடக்கு. சத்தியமாய் நான் அப்படியில்லை. அப்படி நினைக்காதேங்கோ. எங்கடைசமூகத்திலை இருக்கிற அக்கறையிலை தான்இப்படி கதைக்கிறன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

அகதி மய்யிலை எந்தினை நாளைக்குத்தான் இப்பிடி அலங்கோலமாய் வாழுறது. எங்கடை பிள்ளையளின்ரை எதிர்காலத்தைப் பற்றியார் யோசிக்கிறம். சில பேருக்கு இந்த வாழ்க் கையே பெரிசாகத் தெரியலாம். ஆனால் ஆழமாய் யோசிச்சுப் பாத்தால்தான்உண்மை தெரியும்.

பரிசிலை நாள் முழுக்க ரத்தத்தை விந்து உழைக்கிற எங்கட சனங்களுக்கு ஒரு ஆறுதல் தேவை என்டது உண்மைதான். இசை இருக் கிற கலைஞர்களை வளர்க்கிறத்துக்கு ஒரு மேடைகம் தேவை என்டதும் உண்மைதான். அதுக் காக யாவாரம் பண்ணச் சொல்லி யார் - சொன்னது.

இஞ்சடக்கு இசை நடக்கிற நிகழ்ச்சிகளா- லை சனங்களின்ரை சிந்தனை வளர்ச்சி எவ் வளவு தூரம் வளருது என்டால்.......? அதை ஏன் பறைவான்.

நிகழ்ச்சிகள் எல்லாம் ஆரம்பத்திலை தர மாய் இருக்க வேணுமென்டோ அல்லதுஇருக் கமுடியுமென்டோ நான் நினைக்கேல்லை. - ஆனால் நிகழ்ச்சி நடத்துறவையின்ரை நோக் கம் நேரானதாக இருந்தால் காலப்போக் கிலை தரமாய் அமையும் என்டது என்ரை கருத்து. காசை குறியாய் வைச்சுக்கொண்டு வெளிக்கிட்டால் அவ்வளவுதான்.

இதுகளையெல்லாம் செய்யிறவை, ஏதோ வேணுமென்டு சமூகத்தை வளரவிடக் கூடாது அழிக்கவேணும் என்ட நோக்கிலை தான் - செய்யினம் என்டும் உண்மையாய் நான்நினைக் கேல்லை. அவையளுக்கு இதுகளாலை ஏற்படு கிற தாக்கங்களை சரியாய் விளங்கிக் கொள்ள முடியேல்லை என்டு தான் நினைக் கிறன். பணத்தாசை பிடிச்சால் மனிசன்என் னவெணுமென்டாலும் செய்வான் போலை.

இப்ப பாருங்கோ சின்னப்பிள்ளையொண்டு, எதை எதை விரும்புதோ அதை அதைஎல் லாம் நாங்கள் குடுத்துக் கொண்டே இருப் பமென்டால் அந்தப் பிள்ளை எங்களிலைநல் லன்பாய், பாசமாய் இருக்கும். இது உண் மை. ஆனால் நல்லதுகெட்டதுகளை விளங்கிக் கொள்ளமுடியாத பக்குவத்திலை இருக்கிற பிள்ளைக்கு கேட்கிறதையெல்லாம் குடுக்கா மல் எது எது நல்லதோ அதுகளை மட்டும் குடுக்கவேண்டியது பொறுப்புள்ளவர்களின்ரை கடமை இல்லையே. இதைவிட்டிட்டுபொறுப் பில்லாமல் நடந்து கொண்டால் அந்தப்பிள் ளையின்ரை எதிர்காலத்தையே பாழடிக்கிற துமாதிரித்தானே. அநேகமான ஆக்களுக்கு இந்த உண்மை விளங்கியிருக்குமெண்டு நினைக் கிறன். இது மாதிரித்தான் சமூகத்திலையும் சனங்களோடை தொடர்புவைக்கிறவை ஒவ் வோரு விசயத்திலையும் மிச்சம் அவதான- மாய் இருக்கவேணும் சனங்களுக்குத் தேவை யானது மாதிரி இருக்கிறதெல்லாத்தையும். செய்யவெளிக்கிடக் கூடாது. செய்யேக்கை பொறுப்போடை செய்யவேணும்.

என்ன தாமோதரியன் இப்ப அறுக்கவும் வெளிக்கிடிட்டான் என்டு பாக்கிறியள்பா- லை தொடர்ந்து அறுத்துக்கொண்டுதான் இருக்கப் போறான் நீங்கள் இருந்திறவரை க்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

# வாசகர் கடிதங்கள்:

பாரிஸ்
30.8.89

தேடல் ஆசிரியர் குழுவிற்கு,

உங்கள் '5' வது இதழ் படித்தேன். கடந்த நான்கு இதழ்களையும் விட கொஞ்சம் மாறுதலாக இருந்ததை அவதானிக்க முடிந்தது. மேலும் 'தேடல்' வளர்ச்சியுற சில விமர்சனங்களை வைக்கிறேன்.

தங்கள் ஆசிரிய தலையங்கமான துப்பாக்கி ஜனநாயகம் கட்டுரையில் இயக்கங்களின் ஆரம்பகால கட்டங்களை ஆராயாது, தற்போதைய நிகழ்வுகள் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. யார் ஆயுதங்களைக் கொடுத்தார்களோ, அவர்களே அதற்குப் பலியாகியுள்ளனர் என்பதை கோடிட்டுக்காட்டத் தவறிவிட்டீர்கள்.

சீனாவில் நடந்த நிகழ்வுகள் பற்றிய கட்டுரையில் கட்டுரையாளர் சரி, பிழைகளுக்கப்பால், முதலாளித்துவ பிரச்சார சாதனங்களின் செய்திகளைக் ஆதாரமாக வைத்து ஒரு சார்பாகவே எழுதியுள்ளார்.

(1) சீனாவின் இன்றைய நிலை
(2) மாணவர்களது போராட்டம் வர்க்கக் கண்ணோட்டத்துடன் நடைபெற்றதா?

இவை இரண்டுக்குமான விடையின்றி வெறும் சம்பவங்களை மையமாகக் கொண்டு கட்டுரையாளரால் தொகுக்கப்பட்டிருக்கிறது.

சீனாவில் நிகழ்ந்த டெங் தலைமையிலான சீர்திருத்தப் போக்குகள் கூட முதலாளித்துவத்திற்கான அடித்தளங்களாகவே இருந்த நிலையில் மாணவர் போராட்டமும் நிகழ்ந்துள்ளது. இதை சீன தலைமை கொடூரமான முறையில் அடக்கியது மறைக்கமுடியாத உண்மை. ஆனால் இந்த மாணவர் போராட்டம் கூட இன்னும் கூடுதல் ஜனநாயகம் (முதலாளித்துவ சீர்திருத்தங்கள்) வேண்டியே நடைபெற்றுள்ளது.

அடுத்து 'அந்தமான் தீவில்'... கதையில் யதார்த்தம் இல்லை. கற்பனையாக நன்றாகவே படைக்கப்பட்டிருக்கிறது.

'நம்பிக்கை' கவிதையில் கவிஞரின் இலக்கியத்திறமையோ என்னவோ என்போன்ற வாசகர்களுக்கு கருத்தைஉள்வாங்கிக் கொள்வது கடினமாகவே உள்ளது.

உரிய காலத்தில் பிரெஞ்சுப் புரட்சிபற்றி கட்டுரைகள் வந்திருந்தமை சஞ்சிகையை மேலும் செழுமைப்படுத்தியுள்ளது எனலாம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

திரையுலகமேதை சத்யஜித்ரேயின் திரைப்படங்கள் ஒவ்வொன்றும் தரமானதே. அதில் 'சூரனசத்துரு'வும் நன்று. இக்கட்டுரையின் சிறப்பு கட்டுரையாளர் 'ஞானசத்துரு' வுடன் நின்றுவிடாமல் சத்யஜித்ரே போன்ற தரமான கலைஞரை வாசகர்களுக்கு இனங்காட்டியதே. இதுபோன்ற ஆக்கங்கள்தேடலில் தொடரவேண்டும்.

தேடல் தொடர்ந்து வளர வாழ்த்துகின்றேன்.

இப்படிக்கு
க. மூர்த்தி.

தங்களது 'ஆசிரியர் தலையங்கம்' பற்றிய அபிப்பிராயத்தோடு நாம் உடன்படுகிறோம். இயக்கங்கள் மீதான ஒட்டுமொத்தமான ஓர் விமர்சனம் அதில் சுருக்கமாக நான்கு வரிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. தவிர இயக்கங்கள் பற்றிய ஆரம்பகால ஆய்வு என்பது ஆசிரியர் தலையங்கத்தின் எல்லைப்பரப்புக்களை அகலித்துவிடும் என்பதோடு அவைபற்றிய ஆய்வுகளை காலப்போக்கில் - தேடல் முன்வைக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

- ஆசிரியர் குழு-

அன்புடன் 'தேடலுக்கு',

ஆவணி இதழில் வெளியான 'முற்றுப்புள்ளி' என்ற கவிதையில் சில வரிகள்

இத் தீர்ப்புகள்
எங்களால்
திருத்தப்படல் வேண்டும்
அன்றேல்
கொழுத்தப்படல் வேண்டும்

உண்மையான வரிகள். ஆனால் நடைமுறையில் தீர்ப்புக்கள் கூறியவர்கள் தான் அதனைத் திருத்துவதாகவும், கொழுத்துவதாகவும் கூறிஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். பெண்களை இங்கு எங்களால் என்று அழுத்தமாகக் கூறி கவிதையை கூர்மையாக்கியுள்ளார் ஆசிரியர். அவரின் எழுத்துக்கள் பெண்களின் சிந்தனையையும் கூர்மையடையச் செய்யட்டும்.

24.8.89
மேற்கு. ஜேர்மனி.

இங்கனம்
தேடல் வாசகி,
சி. கல்யாணி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

# நடிகமணி வி.வி. வைரமுத்து

ஈழத்தின் பல பாகங்களிலும் ஆயிரந்தடவைகளுக்கு மேல் மேடையேறிய 'அரிச்சந்திர மயானகாண்டம்' என்னும் இசை நாடகத்தினையும், அதில்வரும் 'யாரடி கள்ளி நீயும் இந்த அடாத இருளில் வந்து...' என்னும் கம்பீரமாகஒலிக்கும் பாடல் வரியினையும் ஈழத்தமிழ் மக்கள் அவ்வளவு சுலபத்தில் மறந்திருக்க மாட்டார்கள். இந்தப் பாடலின்மூலம் நாடக இரசிக உள்ளங்களைக் கட்டிப்போட்ட அந்தக்கம்பீரமான குரலுக்குரியவர்தான் ஈழத்துக்கலைஞர் நடிகமணி.வி.வி.வைரமுத்து அவர்கள்.

கலையரசு சொர்ணலிங்கம் அவர்களுக்குப் பிறகு இப்பழைய நாட்டகமரபினை ஒரு நெறிமுறையோடு அழியாமல் கட்டிக்காத்துவந்த இதன் இறுதிவாரிசாக திரு வைரமுத்து அவர்கள் விளங்கினார் எனக் குறிப்பிடலாம். பாடி நடித்தல் என்பதுமிக கடினமானதொரு விடயம். ஆனால் தனது இசைஞானம், சிறந்த குரல்வளம், நடிப்பாற்றல் என்பவற்றினால் மேடையில் இவரால் பிரமாதமாகச் சோபிக்க முடிந்தது.

யாழ்ப்பாணத்து சாதீய அமைப்புமுறை இவரது கலைச்சிறப்பினை நிறையவே இருட்டடிப்புச் செய்தது. தனது வாழ்க்கையையே கலைத்துறைக்காக அர்ப்பணித்த இக்கலைஞனுக்குரிய சரியான இடம் ஈழத்துக்கலையுலகில் கொடுக்கப்படவில்லை என்றேகூறலாம். தமிழ் அரசியல் தலைமைகள் கூட இவரைத் தமது சுயலாபம் கருதியே பயன்படுத்தின. இதனால் இவரது நாடகப்பாணி ஒரு குறிப்பிட்ட தளத்துக்குள்மட்டுமே நின்றுவிட்டதுடன் கருத்துருவங்களிலும் பிற்போக்குத்தனத்தையே பெரிதும்பிரதிபலித்தன.

முற்போக்கு கலை, இலக்கியவாதிகளின் விமர்சனப்பார்வை நடிகமணி வைரமுத்துவின் மீது முறையாக விழுந்திருக்குமாயின் சரியான நெறிப்படுத்தலுக்குட்படுத்தப் பட்டு உருவத்திலும், உள்ளடக்கத்திலும் செழுமைபெற்ற உன்னதமான நாடகங்கள் - எமக்கு நடிகமணியிடமிருந்து கிடைத்திருக்கும். இது தமிழர்க்கே உரித்தான சாபக்கேடாகிப்போனது.

நடிகமணி ஒரு பிறவிக் கலைஞர். நாடகத்தினையே தனது வாழ்க்கையின்முழு நேர ஈடுபாடாகக் கொண்டவர். பாடுவதிலும், நடிப்பதிலும் தனக்கிணையில்லையென் மளவிற்கு மிளிர்ந்தவர். அனேக இசைக்கலைஞர்களிடம் பரிட்சயம் பெற்றிருந்த இவரது கலைத்திறமையினை தமிழ்க்கலையுலகம் நன்றாக பயன்படுத்தவில்லை என்பதுதான் வேதனைக்குரியது. இன்று இவரது மறைவுகுறித்து அவற்றை நினைவு கூரும் போதுதான் இது எத்தனை பெரிய இழப்பு என்பது புரிகிறது. எனினும் அவரது அந்த கம்பீரமான தோற்றம், கணீரென்ற குரல் எமது நெஞ்சைவிட்டு என்றும் நீங்காதிருக்கும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

வாசகர் :- உங்கள் 'தேடல்' சஞ்சிகையில் ஏன் விளம்பரம் போடுவதில்லை?

தே.ஆ.குழு :- 'தேடல்' அறிவைத்தேடும் இலக்கிய சாதனமே தவிர, விளம்பரம் தேடி விளம்பரத்துக்காகவே தன்னை மாற்றிக்கொள்ளும் பச்சோந்தியல்ல. அது மக்கள் நேசிப்போடு உன்னத முற்போக்கான - யதார்த்த நெறியோடு கலை இலக்கியத்திற்ப் பங்களிக்கும் களமாக்கப்பட்டுள்ளது. எனவே, அது உருவத்திலும் உள்ளடக்கத்திலும் சகல பிற்போக்கு அம்சங்களையும் நிராகரித்துக் கொண்டு செழுமையான இலக்கியப் படைப்புக்களை வேண்டி நிற்கிறது. எனவே அது வியாபாரிகளுக்கான விளம்பரத்தை நிராகரிக்கிறது.

-OPAL

வெளியீடு: மக்கள் கலை இலக்கிய அமைப்பு

"THEDAL" B.P:166,92805 PUTEAUX CEDEX

6 வது இதழ்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்